சைவத் திறவு

திரு. வி. க.

சைவத் திறவு

ஆக்கியோர்:

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார்

இரண்டாம் பதிப்பு

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை

1955

விலை அணா 12

அணிந்துரை

“ ஒன்றுகண் டீருல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீருல குக்குயி ராவது
நன்றுகண் டீரினி நமசிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே ” —திருமூலர்

“ அகர முதல எழுத்தெல்லாம் ஆதி - பகவன் முதற்றே உலகு ” என்றார் திருவள்ளுவனார். உலகம் ஒரு முழுமுதலை யுடைத்து என்னும் உண்மையில் இஞ்ஞான்று ஐயங்கொள்ளும் அறிஞர் சிலரென்றே கூறலாம். செம்மை ஆராய்ச்சியான் நல்லறிவு முகிழ்க்கப் பெறுதார் கூற்றுக்களை உலகம் (உயர்ந்தோர்) ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் கடையாயார் கூற்றுக்களான் இடையாயார் கேடுறுதவாறு காக்கவேண்டுவது தலையாயார் கடன்.

கடவுளுண்மையில் உறுதி யுடையார் பலர். அவ்வுண்மை யுணர்ந்தார் சிலர். அவ்வுண்மை யுணரும் வழி கோலினார் மிகச் சிலர். அம் மிகச்சிலர் கோலிய வழி யாது என்பதை விளக்குவது இந்நூல். இக்காரணம் பற்றியே இந்நூற்குச் “ சைவத் திறவு ” என்னும் பெயர் சூட்டப் பட்டது.

தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் நாற்பத்தைந்தாம் ஆண்டு விழா, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தெட்டாம் ஆண்டு, டிசம்பர் திங்கள், இருபத்தெட்டு இருபத்தொன்பதாம் நாட்களில், அடியேன் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் “ தென்னாடுடைய சிவனே போற்றி - எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி ” என்னுந் திருவாக்கைக் குறிக்கோளாகக் கொண்டு அடியேன் தலைமையுரை நிகழ்த்தலானேன். அத் தலைமையுரையைக் கொண்டது இந்நூல்.

இந்நூலிடை, மாணிக்கவாசகனார் நிலை, திருவண்டப் பகுதி நுட்பம், நினைப்பற நினைத்தலின் விளக்கம், மூவித

உடலங்களின் பாகுபாடு, ஒரே கடவுளுண்மை, தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறை என்பது, இறைக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பு, சேய் சிவம் என்பது, சமரசம், இறைவனை யுணரும் வழி, இறைவனது சொரூப தடத்த இயல்புகள், காவியங்களின் இன்றியமையாமை, நம்பிக்கையின் அவசியம், ஆராய்ச்சியின் அளவு, சைவத் திறவுள்ள இடம், கடவுளின் அகண்டாகாரப் படம், "தோடுடைய செவியன்" என்பதின் உள்ளுறை, ஆண்டவன் பெண் ஆண் வடிவமாக இருக்கும் நுட்பம், தோடு விடை மதி சுடலை முதலியவற்றின் உட்பொருள், கோயில்களின் நோக்கம், தற்காலக் கோயில்கள், சாதிப்பேய், நூல்களுங் கோயில்களே என்பது, சீர்திருத்தம், பெரிய புராணம் சீர்திருத்த நூல் என்பது, தவப்பேறு முதலிய பொருள்கள் சுருங்கிய முறையில் ஆங்காங்கே விளக்கப்பட்டிருக்கின்றன. உருவ வழிபாட்டின் நுட்பமும், இன்றியமையாமையும் விளக்கமாக இந்நூற்கண் ஓதப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் படிப்போர்க்கு உருவ வழிபாட்டைப் பற்றிய பலதிற ஐயப்பாடுகள் நீங்குதல் ஒருதலை.

கடவுள் நெறியைப் பற்றியும், அந்நெறி யோம்பிய அடியார்களைப் பற்றியும், திருக்கோயில் வழிபாட்டைப் பற்றியும் நாட்டிடைப் பலதிற ஐயந்திரிபு மயக்கங்கள் தோன்றியுள்ள இவ்வேளையில் வெளிவந்த இந்நூலைப் பற்றி ஈண்டு யான் விரிவுரை கூறவேண்டுவதில்லை. பிழை பொறுக்க.

> " ஒன்றியிருந்து நினைமின்கள்
> உந்தமக்கு ஊனமில்லை "—அப்பர்

சென்னை—14
2—6—1929

திருவாரூர் - வி. கலியாணசுந்தரன்

சைவத் திறவு

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

சகோதரிகளே! சகோதரர்களே!

அடியேன் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபைக்குப் புதியவனல்லன்; இற்றைக்குப் பதினெட்டாண்டுகட்கு முன்னர் இருமுறை சொற்பொழிவாளனாகப் போந்தேன்; 41-ம் ஆண்டு விழாவில் தலைமை வகிக்கும் பேறு பெற்றேன். அத்தலைமைப் பேற்றை மீண்டும் இவ்வாண்டு சபையார் அடியேனுக்கு வழங்கி யிருக்கிறார். சபையார் நல்கிய வரவேற்புக்கும், மொழிந்த அன்புரைக்கும் எனது நன்றியறிதலான வணக்கம்.

1924-ம் ஆண்டில் தலைமை வகித்தபோது "சைவத்தின் சமரசம்" என்னும் பொருள் பற்றி முன்னுரை நிகழ்த்தினேன். அத் தலைமையுரை ஒரு நூலாகித் தமிழுலகில் உலவுவது உங்கட்குத் தெரியும். அதன்கண் சைவ சமயத்தின் சமரசம், பொருளுண்மை, அன்புநிலை, தொண்டு முதலியன ஓதப்பட் டிருக்கின்றன.

இப்பொழுது எப்பொருள் பற்றி முன்னுரை நிகழ்த்தலாமென்று உன்னிப் பார்த்தேன். நேற்றிரவு சபையார் அடியேனை வரவேற்றபோது "தென்னாடுடைய சிவனே போற்றி-எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" என்னுந் திருமொழியை முழக்கினர். அம்முழக்கம் என்னுள்ளத்தில் பசுமரத் தாணிபோல் பதிந்தது. அப் பெருமொழியைக் குறிக்கோளாகக் கொண்டு இப்பொழுது தலைமையுரை நிகழ்த்தலாமென்று கருதுகிறேன்.

பொருண்மீது கருத்துச் செலுத்தற்கு முன்னர், அப் பொருண்மொழியை உலகிற்கு அருளிய ஆசிரியர் நிலையைச் சிறிது ஆராய வேண்டுவது எனது கடனென உணர்கிறேன்.

மாணிக்கவாசகனர்

"தென்னு டுடைய சிவனே போற்றி-எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் அருண்மொழியைத் திருவாய் மலர்ந்தருளிய மாணிக்கவாசகனர் எத்தகையினர் என்பதும், எந்நிலையினர் என்பதும் ஆராயற்பாலன. மாணிக்கவாசகனர் நிலையை அளந்துணர்தற்கு அவர் அருளிய திருவாசகத்தைக் கருவியாகக் கொள்வதே சிறப்பு. திருவாசகத்தில் பல இடங் களில் அவரது நிலை புலனுகிறது. இரண்டோரிடங்களை மட்டும் ஈண்டுக் குறிப்பிடலாமெனக் கருதுகிறேன்.

"இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே."

இத் திருவாசகத்தில் "நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிதுமற் றின்மை" என்னும் பகுதியை ஊன்றி நோக்குவோமாக. ஆண்டவனல்லால் "பிறிதுமற் றின்மை" என்னும் நிலை எப்பொழுது கூடும்? "நினைப்பற நினைக்கும்" நிலையில் அப் பெருநிலை கூடுமென்க. "நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சில் - வினைப்பற் றறுக்கும் விமலன் இருக்கும்" என வரூஉம் திருமூலர் திருவாக்கும் ஈண்டுக் கருதற்பாற்று.

நினைப்பற நினைத்தல்

நினைப்பும் மறப்பும் அறும் நிலை ஒன்றுண்டா என்னும் ஐயம் சிலர்க்குப் பிறக்கலாம். இந்நாளில் அவ்வையம் சிறப்பாகப் பிறக்கலாமென்று சொல்வேன். காலத்தின் கோலம்! நாட்டின் நிலை! சமயக்கல்வி குறைபாடு! என்செய்வது!

எடுத்துக்கொண்ட மாணிக்கவாசகனார் திருவாக்கையே துருவிப் பார்க்கலாம். "நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிதுமற்றின்மை" என்றருளிய பெருமான் அதற்குரிய வழியையுங் குறிப்பாக அதன்பாங்கர் கோலிக் காட்டியுள்ளார். "சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும் * * *" என்று நம்பெருமான் அருளிய மெய்யுரையின் நுட்பத்தை எனக்கொரு பெரியார் அறிவுறுத்தியவாறு ஈண்டுக் கிளத்துகிறேன்.

"சென்று சென்று" என்று இருமுறையும் "தேய்ந்து தேய்ந்து" என்று இருமுறையும் மணிவாசகனார் கூறியதன் கருத்தென்னை? முதல் "சென்று" பருவுட (ஸ்தூலம்) லினின்றும் நுண்ணுட (சூட்சுமம்) லுக்குச் செல்வதைக் குறிப்பது; இரண்டாவது "சென்று" நுண்ணுடலி னின்றும் முதல் (காரண) உடலுக்குச் செல்வதைத் தெரிப்பது. இவ்வாழ்வில் முதலுடல் காட்சி பெற்றதும் உடலெடுப்புக்குத் துணையாக நிற்கும் கன்மமலம் தேய்வுறும். கன்மம் ஒடுங்கியதும் எல்லாவற்றிற்கும் அடிப்படையாகவுள்ள ஆணவம் அல்லது அவித்தை தேய்வுறும். அவித்தை ஒடுங்கியதும் ஒன்றும் நிலையுறும். ஆகவே "தேய்ந்து தேய்ந்து" என்னும் இரண்டில் முன்னையது கன்மத் தேய்வையும், பின்னையது ஆணவத் தேய்வையும் அறிவுறுத்தல் உணரற்பாலது.

சென்று
சென்று
தேய்ந்து
தேய்ந்து

இவ்வாறு பருவுடலினின்றும் நுண்ணுடலுக்கும், நுண்ணுடலினின்றும் முதலுடலுக்கும் போதரும் பேற்றை யும், அதனுல் கன்ம அழிவும் ஆணவ ஒடுக்கமும் உறும் பேற்றையும் அடைவோர் "நினைப்பும் மறப்பும்" அற்ற ஒரு நிலை எய்துவர் என்று அறிஞர் கூறுப. மாணிக்கவாசகனுர் இப்பெரு நிலை பெற்ற பெரியாரென்பது, "நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிதுமற் றின்மை, சென்றுசென் றணு வாய்த் தேய்ந்துதேய்ந் தொன்ரும் * * *" என்று அவர் அருளிய உரைகளால் அறியக் கிடக்கிறது.

ஒருடலுணர்வினின்றும் இன்னேருடலுணர்விற்குப் போந்து நிற்றல், கன்மம் ஆணவம் ஒடுங்கல், நினைப்பற நினைத்தல் முதலியன வாய்வேதாந்தமென்று சிலர் எள்ளுவர். இப் பருஉடலுணர்வோடு வாழும் நம்மனேர்தம் புலன் களுக்குப் பொருளாகாத நுட்பங்களை உலகியலறிவு கொண் டும், அறிவியல் துணை கொண்டும் ஆராய்ந்து முடிவு காண முயலல் வேண்டும். அம்முயற்சியில் தலைப்படாது "எல்லாம் பொய், புரட்டு" என்று சொல்வது மிக எளிது. அவ் வெளிய உலகில் வாழ்ந்து இன்புறுவோரைப் பற்றி நாம் கவலையுற வேண்டுவதில்லை. அவர் நிலை குறித்து இரங்கி, அவர் உண்மை ஆராய்ச்சியுலகில் இறங்கி யுழைக்கும் நெஞ்சம் பெறுமாறு ஆண்டவனை வழுத்த வேண்டுவதே நமது கடமை.

ஐய உலகில் வாழ்வோர்க்கு மற்றவர் தத்தம் ஆராய்ச்சி யில் கண்ட நுட்பங்களைச் சொல்ல வேண்டுவது அவரவர் கடமை. எனது சிற்றறிவுகொண்டு சில ஆண்டுகளாக யான்

மூவித உடல்

ஆராய்ந்து கண்ட சில நுட்பங்கள், பரு வுடல், நுண்ணுடல், முதலுடல் முதலியவற் றின் உண்மையையும், அவ்வவ்வுடலின் உணர்வு நிலையையும், பிறவற்றையும் என்னறிவில் உறுதிப்படுத்தி யிருக்கின்றன.

பருவுடல், நுண்ணுடல், முதலுடல் முதலியவற்றின் உண்மைகளை நமது நாட்டு நூல்கள் பல அறிவுறுத்து கின்றன. இப்பொழுது மேல்நாட்டறிஞர் சிலர் அவ்வுடல் நிலைகளை ஆராய்ந்து பலதிற உண்மைகளை வெளியிட்டு வருகிருர். ஸர் ஆலிவர் லாட்ஜ் முதலியோர் புரிந்து வரூஉம் ஆராய்ச்சி நமது சமய ஆராய்ச்சிக்குப் பெருந் துணையாக நிற்கிறது. பருவுடலினின்றும் ஆவி பிரியும் வேளையில் அதன் படம் இப்பொழுது எடுக்கப்படுகிறது. இம்முயற்சியில் தலைப் பட்டவருள் ஒருவர் பாரிஸ் நகரவாசியாகிய டாக்டர் பாரடக் (Dr. Baraduc of Paris) என்பவர். இது குறித்து ஈண்டு விரிவுரை வேண்டுவதில்லை.

மக்கள் உலகை எடுத்துக்கொள்வோம். மக்கள் வடிவம் எல்லாரும் பெற்றிருக்கிருர். ஆனல் அறிவு நிலையில் எல்லாரும் ஒத்திருக்கிருரா என்பது உன்னற்பாலது. சிலர் விலங்கு மனம் பெற்றிருக்கிருர்; சிலர் இளைய மனம் பெற்றிருக்கிருர்; சிலர் தெய்வ மனம் பெற்றிருக்கிருர். இன்னும் பலதிற மன முடையாரு மிருக்கிருர். இத்திற மனமுடையார் ஆராய்ச்சி யில் தலைப்படுவரேல் அவரவர் தத்தம் அறிவாற்றலுக்கு ஏற்ற அளவினதாகவே பொருளுண்மை பெறுவர்.

மனோநிலை

பர்மாவில் ஒரு சிறுவன் கல்லூரி போந்து கணிதம் பயிலாமலே மிகச் சிக்கலான கணக்குகளுக்கு நொடிப் பொழுதில் விடையிறுக்கிருன். ஸ்ரீவில்லிபுத்தூர் இளைஞன் இயற்கையாகவே கணித ஞானம் பெற்றிருந்தது உங்கட்குத் தெரியும். ஒட்டப்பிடாரத்தில் ஓரிளம் பாலகன் திருக்குறள் அவதானஞ் செய்வதை நான் நேரிற் கண்டேன். இவ்விளை ஞர்களுக்கு இவ்வாற்றல் யாண்டிருந்து பிறந்தது? இவ்வாற் றல் பெருத ஒருவன் "இவைகளெல்லாம் கட்டுக்கதை; ஏமாற்றம்" என்று சொன்னல் அவனை நாம் என்செய்வது?

காலஞ்சென்ற கும்பகோணம் இராமாநுஜனர் பெற்றிருந்த கணக்கறிவைத் தான் பெருத காரணங்கொண்டு ஒருவன் அவ்வறிஞரை இழித்துப் பழித்துக் கூறினல், அக்கூற்றை அறிஞர் எங்ஙனங் கொள்ளல் வேண்டுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அதுபோல மெய்யறிவு பெற்ற ஆன்ருேர்களை, அவ்வறிவு பெருத விலங்கு மனமுடையார் ஏசிக் கூறினல் நாம் என் செய்வது? அவ்விலங்கு மனம் மாறித் தெய்வமனம் பெறும்வரை அச் சகோதரர்கட்குச் சில நுட்பங்கள் புலனுதல் அரிதே.

உலகியல் வழிநின்று ஈண்டோர் எடுத்துக்காட்டுத் தருகிறேன். பனிக்கட்டியை எடுத்துக்கொள்வோம். அஃது எப்படிக் கிடக்கிறது? அஃதோர் எல்லைக்குட்பட்டுத் திண்ணெனக் கிடக்கிறது. அக் கட்டிமீது வெம்மை படரப் படர அது நீராக மாறுகிறது. அந்நீரின்மீது மேலும் மேலும் வெம்மை படியப் படிய அது காற்ருக மாறுகிறது. அக்காற்றின்மீது கதிரொளி பாயப் பாய அஃதொரு அதிதீவிர சக்தியாக மாறுகிறது. முதலில் கட்டியாய், பின்னே நீராய், காற்ருய், அதிதீவிர சக்தியாய் மாறி மாறிச் சென்ற பொருள் ஒன்ரு? பலவா? பொருள் ஒன்றே. ஆனல் வெம்மையின் தாக்குதற்கேற்ப அது பன்னிலை எய்துகிறது. இவ்வாறே அறிவு ஒன்ருயினும், அதன் நிலை, பருமை நுண்மை முதலிய உடல்களின் சார்புக்கேற்ற அளவில் விளக்கமுறும். பனிக்கட்டியாய்க் கிடந்த ஒன்று, பின்னை எங்ஙனம் நீராகி, காற்ருகி, எல்லை, கட்டு முதலியவற்றிலடங்காத வொன்ருக மாறுகிறதோ, அங்ஙனே பருவுடலில் கட்டுப்பட்டுக் கிடக்குந் திண்மை அறிவு, ஆண்டவனருள் ஒளியால் நுண்ணுடல் முதலுடல் முதலிய உடல்களின் சார்பு பெறும்போது, படிப்படியாக அகண்டாகாரத்தைப் பெறும் ஆற்றல் பெறுகிறது. உலகியற்

பனிக்கட்டி

பொருள்களின் நிலை மாறுதலுறுதற்போல, அறிவு விளக்க நிலையிலும் மாறுதலுறுதல் உண்டு. ஆகவே, மக்கள் உடலமைப்பை மட்டுங்கொண்டு எல்லாரும் ஒரு தன்மையினர் என்று கொள்ளல் அறிவுடைமை யாகாதென்க. மக்கள் மனோநிலையில் பலதிற வேற்றுமைகளை யுடையவரா யிருத்தல் வெள்ளிடைமலை; வெள்ளிடைமலை.

இனி, மாணிக்கவாசகனார் நிலைமீது கருத்துச் செலுத்துவோம். அவர் நிலையென்ன? அவர் அறிவு பருவுடலளவிலா கட்டுப்பட்டுக் கிடந்தது? அவர் மாறுதற்குரிய கலைப் புலமை கொண்டா பாக்கள் பாடினர்? அவர் பனிக்கட்டியனைய பருவுடலுணர்வு கடந்து, காற்றனைய முதலுட லுணர்வில் நின்று, கன்மமும் அவித்தையும் கழியப் பெற்று, நினைப்பற நினைக்குந் தன்மையெய்தி, ஆண்டவனல்லால் பிறிது மற்றின்மைகண்டு, மாறா இன்பத்தில் திளைத்து இருந்தவர். அந்நிலையில் நின்று அப்பெரியார் "நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிதுமற் றின்மை - சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றும் * * * *" என்று அருளினர். இவ்வருண்மொழியான் மாணிக்கவாசகனார் நிலை நனி விளங்குதல் உணர்க.

மாணிக்க வாசகனார் நிலை

மாணிக்கவாசகனார் தம் வாழ்வில் பெற்ற பெருநிலையை மற்றுமோரிடத்தில் விளக்கியிருக்கிறார். அந்நிலையை அவர் அருண்மொழியில் காணும்போதெல்லாம் எனதுள்ளம் குழைந்து குழைந்து உருகும். அந்நிலையன்றோ பிறவியெடுத்த ஒவ்வோருவரும் உறல்வேண்டும்? அப் பெருவாழ்வை என்றே பெறுவேம்! மாணிக்கவாசகா! நின்னருள் வேண்டும்; வேண்டும். அன்புடைச் சகோதரர்களே! மாணிக்கவாசகனார் நிலையை ஓர்மின்! ஓர்மின்!!

" உளையா வன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்

தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தி
னாற்றே னாக வவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தன
னேற்றார் மூதூ ரெழினகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயி னடியோ மடிக்குடி
லொருத்தரும் வழாமை யொடுக்கினன்
றடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியு மொல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரைவித்
துவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கா றோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான வமுத தாரைக
ளெற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்றேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன் ”

இப் பொன்மொழிகள் திருவண்டப் பகுதியினிறுதியில் ஒளிர்வன. மாணிக்கவாசகனார் தமது மாயாவுடல், அருளமிழ்தப் பொன்னுடலாக மாறியதை வியந்து வியந்து கூறுகிறார். "அலைகடற் றிரையின் ஆர்த்து ஆர்த்து" என்றும், "அவயவம் சுவைதரு கோற்றேன் கொண்டு செய்தனம்" என்றும், "பருகியும் ஆரேன், விழுங்கியும் ஒல்ல கில்லேன்" என்றும், "அமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்" என்றும், "அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றினன்" என்றும், "கள்ளூ றுக்கை யமைத்தனன்" என்றும், "என்னையு மிருப்ப தாக்கினன்" என்றும், "என்னில் கருணை வான்றேன் கலக்க அருளொடு பராவமு தாக்கினன்" என்றும் வரூஉம் அமிழ்த மொழிகளைப் பருகிப் பருகி உன்னுவோமாக.

இந்நிலையெய்திய மாணிக்கவாசகனாரைப் பருவுடலுணர்வுடன் கட்டுப்பட்டுக் கிடக்கும் ஒருவன் தன்னுடன் ஒப்ப நோக்கி ஆராய்வது அறிவுடைமை யாகாது. மாணிக்கவாசகனார் ஆனந்த வடிவான மாதவர் என்பதை ஓர்தல் வேண்டும். மாணிக்கவாசகனார் மெய்ந்நிலையை அவர் பின் வந்த பலர் வியந்து வியந்து போற்றியிருக்கிறார். இற்றைக்குச் சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன்னர்த் தமிழ் நாட்டில் வதிந்த இராமலிங்கசுவாமிகள் மாணிக்கவாசகரைப் பற்றிப் பாடிய பாக்களை - அன்பர்களே !-படித்துப் பாருங்கள். அப் பாடல்களில் இரண்டோரடிகளை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன்.

இராமலிங்க சுவாமிகள்

"மாணிக்க வாசகனே ஆனந்த வடிவான மாதவனே" என்றும், "அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்த பின்னர் - இன்புருவம் ஆயினைநீ எழில் வாதவூரிறையே" என்றும், "ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே" என்றும் இராமலிங்கசுவாமிகள் வாதவூரடிகளை

வழுத்தியிருத்தல் காண்க. மேலே எடுத்துக்காட்டப்பெற்றுள்ள திருவண்டப் பகுதியின் நுட்பத்தை இராமலிங்க சுவாமிகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோ லுணர்ந்து, அதன் பெற்றியைச் சிறப்பாகப் போற்றியிருத்தல் ஈண்டு உன்னற்பாலது.

உருவண்டப் பெருமறையென் றுலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதியெனுந் திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றெப் பெருந்தவருங் கூறுகின்ற கோவேநீ
இருவென்றத் தனியகவ லென்னமெனக் கியம்புதியே

என்று இராமலிங்க சுவாமிகள் திருவண்டப்பகுதியின் உள்ளக்கிடக்கையை உணர வேட்கைமீக்கூர்ந்து நின்றதை ஓர்க.

ஆனந்த நிலை

நமது ஆனந்த வடிவான மாதவனார் நிலையை எனது புன்மொழியால் இன்னும் புகன்று போதல் வேண்டுமோ? "அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக-என்பரமல்லா இன்னருள் தந்தாய்" "ஆவியோ டாக்கை புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப் பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே - திரைபொரா மன்னும் அமுதத் தெண்கடலே" "சிறைபெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந் திருப்பெருந் துறையுறை சிவனே" "தந்தது உன்றன்னைக் கொண்டது என்தன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர் - அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் யாதுநீ பெற்றதொன் றென்பால்" "அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்டு அளவிலா ஆனந்தம் அருளிப் பிறவிவேர் அறுத்து என்குடி முழுதாண்ட பிஞ்ஞகா" "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே" "புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங்

கோயிலாப் புகுந்துஎன் என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட ஈசனே" "தேனைய் இன்னமுதமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான் - தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான் - ஊனுரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே" எனவரூஉம் மணிவாசகனார் இன்ப மொழிகளால் அவரது நிலை இனிது புலனாதல் காண்க.

"தென்னா டுடைய சிவனே போற்றி - எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் அருண்மொழி எந்நிலை யினர் திருவாக்கி னின்றும் பிறந்தது? அன்பர்களே! உன்னுங்கள். "நினைப்பற நினைந்து ஆண்டவ னல்லால் பிறிதுமற் றின்மை" என்னும் ஒரு பெரும் நிலையுற்ற ஒருவர் திருவாய் மலர்ந்தது, "தென்னா டுடைய சிவனே போற்றி - எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் அருண் மொழி.

ஒரே கடவுள்

இனித் "தென்னா டுடைய சிவனே போற்றி - எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் பொருண்மீது கருத்துச் செலுத்துவோம். இப் பெருமொழியின் பொருள் வெள்ளிடைமலை. தென்னா டுடைய சிவன் எந்நாட் டவர்க்கும் இறைவன் அல்லது எந்நாட் டவர்க்கும் இறைவன் தென்னாடுடைய சிவன் என்பது அத் திருவாசகத்தின் கருத்து.

பொருள்

எந்நாட்டுக்கும் இறைவன் ஒருவனே. அவ்வொருவ னுக்குப் பல நாட்டு மொழிகளில் பல பெயர்கள் வழங்கு கின்றன. அப் பன்மைப் பெயர்கள் பெரிதும் அவ்வந் நாட்டின் இயற்கை நிலையை யொட்டிப் பிறந்திருத்தல் வேண்டும். பெயர் பல கொண்டு கடவுளர் பலர் என்னும் முடிவுக்கு வருதல் அறியாமை. "ஒருநாமம் ஒருருவம்

ஒன்று மில்லாற்கு ஆயிரந் - திருநாமம் பாடிநாம் தெள்ளேணங்கொட்டாமோ" என்றார் திருவாசகனார். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னுந் திருமூலர் மொழியும் ஈண்டு உன்னற்பாலது.

தென்னாட்டவராகிய நாம் இறைவனைச் சிவம் என்னுஞ் செம்மொழியால் வழுத்துகிறோம். சிவம் என்னுஞ் சொல் வடமொழியிலும் வழங்கப்படுகிறது; தென்மொழியிலும் வழங்கப்படுகிறது. தென்மொழி வல்லார் சிவம் என்பதற்குச் செம்மை யென்று பொருள் கூறுகிறார். செம்மை யென்னுஞ் சொல் பல பொருளுடையது. ஈண்டு எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்பச் செம்மை யென்பதற்குச் செந்நிறம் என்னும் ஒரு பொருளை மட்டுங் கொள்கிறேன். தென்னாட்டார் பரம்பொருளைச் செந்நிறமாகக் கண்டு, அதனைச் சேயென்றுஞ் சிவமென்றும் போற்றலாயினர். இதற்குக் காரணமென்னை?

சிவம்

இறைவன் ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாதவன். அவன் அறிவாய் யாண்டும் நீக்கமற நிற்பவன். "இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதியுங் காட்டொணாதே" என்றார் அப்பர் சுவாமிகள். இத்தகை அறிவுப் பொருளின் உண்மையை எங்ஙனம் உணர்வது? அதன் வடிவான இயற்கையைக் கொண்டே அதன் உண்மையை யுணர்தல் வேண்டும். இயற்கை இறைவனது உடல். அவ்வுடலுள் உயிராயிருப்பவன் இறைவன். நமது உடலுள் உயிர் எங்ஙனம் நிலவுகிறதோ அங்ஙனே இயற்கையுள் இறைவன் நிலவுகிறான். கண்கூடாகக் காணும் நமது உடலைக் கொண்டே நமது உயிருண்மை உணர்கிறோம். அதுபோலவே கண்கூடாகக் காட்சியளிக்கும் இயற்கை வடிவங்களைக் கொண்டே

இறையும் இயற்கையும்

இறையுண்மை உணரல் வேண்டும். இயற்கைவழி இறைவனை உணர்ந்தவரே ஞானிகளெனப்படுவர்.

இயற்கை முதல் ஒன்றாயினும், அது காரியப்படும்போது பல இயல்புடையதாய்ப் பரிணமிக்கிறது. நமது நாட்டின் இயற்கையிலே என்னை? நமது நாடு வெம்மை செறிந்த நாடு என்று எவருங் கூறுவர். நிரட்சரேகை (Equator) நமது நாட்டின் பாங்கர் பாய்ந்து செல்கிறது. அக் கோட்டின் பாங்கருள்ள நாடுகள் வெம்மை செறிந்தனவா யிருத்தல் இயல்பு. இயற்கைவழி நின்று ஆராய்ந்தால் நமது நாடு வெம்மை செறிந்த நாடு என்பது செவ்வனே புலனாகும். நமது நாட்டு இயற்கையின் காரியங்களைத் துருவித் துருவி ஆய்ந்து ஆய்ந்து சென்றால் அவைகளின் காரணங்கள் யாவும் வெம்மை மயமாயிருத்தல் பெறலாம். அவ்வியற்கை வெம்மைவழி இறைவனை நமது நாட்டுப் பெரியோர்கள் உணர்ந்தார்கள்.

இயற்கையில் வெம்மை

இறைவனுடல் இயற்கை யென்று மேலே சொல்லப்பட்டிருக்கிறது. நமது நாட்டின் இயற்கையோ வெம்மையை அடிப்படையாகக் கொண்டது. ஈண்டு இறைவனுக்குரிய இயற்கைவடிவம் எத்தகையதா யிருத்தல் வேண்டும் என்று உன்னுவோமாக.

அதனை வெம்மைக்குரிய நெருப்பு வடிவமென்று விளக்க வேண்டுவதில்லை. அந் நெருப்பு மேனியைப் பெரியோர்கள் பலவாறு புகழ்ந்து புகழ்ந்து போற்றி யிருக்கிறார்கள். அவ்வுரைகளை ஈண்டு விரிக்கிற் பெருகும். மாணிக்கவாசகனார் அருளிய திருவாசகத்தினின்றுஞ் சில பொன்மொழிகளை மட்டும் ஈண்டு அகழ்ந்தெடுத்துக் காட்டுகிறேன். "தூயமேனிச் சுடர் விடு சோதி" "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்

நிவண்ணம்

சோதியை" "விரி சுடராய் நின்ற மெய்யன்" "செந்தழல் போற் றிருமேனி" "ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே" "பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே" "சோதியாய்த் தோன்றும் உருவமே" "சோதியே சுடரே சூழொளி விளக்கே" "கடுந்தழற் பிழம்பன்ன மேனி" எனவரூஉஞ் செம்மொழிகளை உற்றுநோக்குக.

வெம்மை நெருப்பின் நிறமென்னை? செம்மை யன்றோ? அச் செம்மையைச் சேயென்றும், சிவமென்றும் இயற்கை நுட்பமுணர்ந்த நம் முன்னோர்கள் போற்றினர்கள். "செய்ய மேனியனே செய்வகை அறியேன்" என்றும், "செஞ்சுடர் வெள்ளமே" என்றும், "ஆடகச் சீர்மணிக் குன்றே" என்றும், "வெம்பவள வெற்பிற் றேசுடையாய்" என்றும், "செக்கர்போலுந் திருமேனி திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்து" என்றும் வாதவூரடிகள் இறைவன் தீவண்ணத்தைச் சிறப்பித்துக் கூறுதல் காண்க. சிவத்துக்குஞ் செம்மேனிக்கு முள்ள தொடர்பை "சிவனெனு நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" என்று அப்பர் சுவாமிகளும் விளக்கி யிருத்தலை ஓர்க. வேறு பல ஆன்றோர்கள் இறைவன் தீவண்ணத்தைக் குறித்துப் பாடிய பாக்கள் பலப்பல. அவைகளை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

சேய் - சிவம்

இறைவனது இயற்கை வடிவஞ் செக்கச் செவேலெனத் திகழ்தல் நோக்கி மாணிக்கவாசகனார் "தென்னாடுடைய சிவனே போற்றி" என்று வழுத்தி, அச்சிவனே மற்ற நாடுகளின் இயற்கைக் கேற்ப வெவ்வேறு பெயரான் அழைக்கப்படும் இறைவன் என்பதை அறிவுறுத்தப் பொதுவாக "எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" என்றருளிச் செய்தார்.

இறைவன் என்னுந் தமிழ்ச் சொற்கு யாண்டும் நிறைந்துள்ள ஒருவன் என்பது பொருள். தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் அல்லது எந்நாட்டவர்க்கும் இறைவன் இத் தென்னாடுடைய சிவன் என்று போற்றப் படுகிறானென்க.

இறைவன் ஒருவனே என்பதை முன்னர் இரண்டோர் உரைகளால் விளக்கியுள்ளேன். அக்கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறேன். "தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன்" என்று பன்னிப் பன்னி அடிக்கடி சொல்ல வேண்டுவதில்லை.

இறைவனை எவர் எப்பெயரான் போற்றினாலென்ன? மொழி வேற்றுமையைப் பொருள் வேற்றுமையாகக் கோடல் அறியாமை. இவ்வறியாமை சிலவிடங்களில் சமயவெறி யூட்டுவதாகிறது.

நந்தமிழ்ப் பெரியோர்கள் சமரசத்தையே அறிவுறுத்திச் சென்றார்கள். அச்சமரச நுட்பத்தை ஈண்டு விரிப்பின் அஃ தொரு நீண்ட சொற்பொழிவாகுமே என்று அஞ்சுகிறேன். ஆகவே, சில உரைகளால் மட்டும் அச் சமரசத்தை விளக்கிச்செல்ல விரும்புகிறேன்.

சமரசம்

இங்கே அப்பர் சுவாமிகள் வரலாறு நினைவிற்கு வருகிறது. அப்பர் சைவ சமயத்தில் பிறந்தாரென்றும், பின்னர்ச் சமண சமயம் புகுந்தாரென்றும், மீண்டும் சைவ சமயம் சார்ந்தா ரென்றும் அவர் வரலாறு சொல்கிறது. இப்போக்கு வரவெல்லாம் ஒரே கடவுள் நெறியில் நிகழ்தற்கு இடனுண்டோ? அன்பர்களே! உன்னுங்கள். பின்னை அப்பர் வரலாறு பொய்ம்மையா? அவ்வரலாற்றின் உண்மைகாண முயல்வதே அறிவுடைமை.

அப்பர் சுவாமிகள்

இறையருள் பெருது சமய நுட்பங்களைக் கலையளவில் ஆராயுங்கால் மக்கட்குப் பல கடவுளுணர்வு பல சமய வுணர்வு தோன்றுதல் இயல்பு. ஆண்டவன் அருள்நிலை கூடப்பெற்றவர்க்குப் பன்மை உணர்வு அறுந்து ஒருமை உணர்வு அரும்பும். இங்கே அப்பர் நிலையை இருகூருகப் பிரித்துக்கொள்ளல் வேண்டும். ஒன்று இறையருள் பெருத நிலை; மற்ருென்று இறையருள் பெற்ற நிலை. அப்பர்

இருநிலை

சுவாமிகள் முதல் முதல் கொண்ட சைவ சமயம் அவர் தாய் தந்தையர்வழி நின்று கொண்டது. பின்னே நூல்களை ஆய ஆய அவர்க்குச் சமண சமயம் மெய்ச்சமயமெனத் தோன்றிற்று. அவர் அச்சமயம் புகுந்தார். அவர் தவம் அவர்க்கு ஆண்டவன் அருள்நெறியைப் பின்னே கூட்டிற்று. அவ்வருள் நெறி நின்று அப்பர் தமது பழைய நிலையை உன்னுகிருர். "முன்னர்ச் சைவஞ யிருந்தபோது ஒரு கடவுளையும் பின்னர்ச் சமணனுயபோது மற்ருெரு கடவுளையுமா போற்றிக் கொண்டிருந்தோம்? அப்போற்றலை ஒரு கடவுளும், இப்போற்றலை வேருெரு கடவுளும் ஏற்கவில்லை என்பது இப்பொழுது புலனுகிறது. இரண்டையும் ஒரே கடவுள் ஏற்றல் இப்பொழுது விளங்குகிறது" என்னுங் கருத்துத் தோன்ற "சலம்பூவொடு தூப மறந்தறியேன், தமிழோடிசை பாடல் மறந்தறியேன், நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன், உன் நாமம் என்னுவில் மறந்தறியேன்" என்று பாடினுர். இச் சமரசமே ஆண்டவன் அருள்நெறி என்பது. இதுவே தமிழ் நாட்டுப் பெரியோர்கள் அறிவுறுத்திய சிவநெறி யாகும். இந்நெறி பின்னுல் பலவாறு திரிக்கப்பட்டது. "அப்பர் சுவாமிகள் அருளிய 'சலம் பூவொடு' என்னுந் திருப்பாட்டின் உள்ளக்கிடக்கை இதுதானு? காலத்துக் கேற்ற முறையில் நீங்கள் இவ்வாறு அதைத் திரித்துக்

கூறுகிறீர்களா'' என்று சிலர் வினவலாம். அப்பர் சுவாமிகள் பலவிடங்களில் சமரசக் கருத்தைப் பெய்து பாடியிருக்கிருர். அவைகளுள் ஈண்டொரு திருப்பாடலை எடுத்துக் காட்டுகிறேன்.

"வாது செய்து மயங்கு மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலு மேழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதே வனலால் தேவர்மற் றில்லையே."

இத் திருப்பாடலால் அப்பர் சுவாமிகளின் சமரச உணர்வு தெற்றெனெ விளங்குதல் காண்க.

தமிழ்ப் பெரியோர்கள் ஒரே கடவுள் என்னும் உண்மையில் உறைந்து நின்றவர்கள் என்பதற்குச் சான்று கள் பல உண்டு. அவைகளை ஈண்டு விரித்துக்கூற வேண்டுவ தில்லை. மொழிகளின் பன்மைகொண்டு கடவுளுக்கும் பன்மை கூறல் அறியாமை. "அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும் வீடுபேருய் நின்ற விண்ணோர் பகுதி" என் றும், "வணங்கு நின்னை மண்ணும் விண்ணும்" என்றும் மணிவாசகனர் அருளிய மெய்யுரைகளின் உள்ளக்கிடக் கையை உணர்க.

இறைவன் ஒருவனே. அவன் இத் தென்னுட்டில் சிவன் என்னும் பெயரால் போற்றப்படுகிருன். அவ் விறைவனுஞ் சிவனை மெய்யறிவால் உணர்ந்த தமிழ்ப் பெரி யோர்கள், அவனை எவ்வெவ்வாறு வழுத்தினர்கள் என்ப தைச் சிறிது ஆராய்வோம்.

"சிவனுரு அருவு மல்லன் சித்தினோ டசித்து மல்லன்" என்ருர் அருணந்தி சிவனர். "யார்அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை, யார்அறிவார் அந்த அகலமும் நீளமும், பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்றதன், வேர்

அறியாமல் விளம்புகின் றேனே " என்ருர் திருமூலனுர். மாணிக்கவாசகனுர்திருமொழியில் சிலவற்றைப் பார்ப்போம். " பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர் " "உள்ளப் படாத திருவுருவை" "கீதமினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான், பாதமிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற், சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை, ஆதிகுண மொன்று மில்லா னந்தமிலான் வரக் கூவாய் " " எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் " " மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே " " போக்கும் வரவு மிலாப் புண்ணியனே "—இத் திருமொழிகளை நோக்குக.

சிவனை உணரும் வழி

எந்நாட்டவர்க்கும் இறைவன் - நமது தென்னுடைய சிவன் - மாற்ற மனங்கடந்து, ஊர் பேரின்றி, ஆதியந்தமின்றி இருக்கிருன் என்று ஆன்ருேர் கூறிப்போந்தனர். அச் சிவனை எப்படி உணர்வது? சிவன் உணர இயலாத ஒருவனு? என்று ஐயுற இடனுண்டு. சிவன் " மாற்ற மனங்கடந் தவன் ", "போக்கு வரவுமிலாப் புண்ணியன் ", " ஒரு நாமம் ஒருருவ மில்லாதவன் " என்றருளிய நமது பெரியார், சிவனை உணராது அவ்வுரைகளைப் பகர்ந்திரார். அவர் எங்ஙனம் உணர்ந்தார் ? " நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிதுமற் றின்மை " என்று உணரும் வழியை அப்பெரியார் காட்டா நிற்கிருர்.

மாற்ற மனங்கடந்த ஒன்றை மாற்ற மனங்கடந்தே பார்த்தல் வேண்டும். போக்கு வரவிலா ஒன்றை மன ஓட்டமில்லா விடத்திலிருந்தே நோக்கல் வேண்டும். கருவி கரணங்களில்லா ஒன்றைக் கருவிகரணங் கடந்து நின்றே காண்டல் வேண்டும். பருவுடல் உணர்வுமட்டுங் கொண்டு

" மாற்ற மனங்கடந்த இறைவன் எங்கே " என்றால், எங்கே எங்கே என்றுதான் ஏங்கி யொழிதல் வேண்டும். "உரையுணர்வு இறந்துநின்று உணர்வதோர் உணர்வே " எனவரூஉம் இன்னுரையை உற்று உற்று ஊன்றி ஊன்றி நோக்குவோமாக. " உணர்வதோர் உணர்வே " என்று முழுமுதற் பொருளை நம் பெருமான் விளிக்கிறார். எந்நிலையில் நின்று அச் செம் பொருளை உணர்வது என்பதை அன்பர் உலகிற்கு உணர்த் தாமற் போகவில்லை. அந்நிலை எது? "உரையுணர்வு இறந்து நிற்கும் நிலை " என்று அடிகள் அறிவுறுத்துகிறார். அப் பெருநிலையே நினைப்பற நினைக்கும் நிலையென்க. நினைப் பற நினைக்கும் நிலையில் " இறைவ னல்லால் பிறிதுமற் றின்மை " என்னுங் காட்சி பெறுதல் கூடும். இந்நிலை நின்றே மாணிக்கவாசகனார் " நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிதுமற் றின்மை * * * " என்று இறைவனுண் மையை இனிதெடுத் துரைக்கிறார்.

இறைவன் இயல்பு

நினைப்பற நினைக்கும் ஒரு நிலை, பருவுடல் நுண்ணுடல் கடந்த ஒரு நிலை ; கன்மம் தேய்ந்து ஆணவம் ஒடுங்கும் ஓர் உணர்வு நிலை. அந்நிலையில் இறைவன் திருவருள் பதியும். அத் திருவருளால் இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்கும் உண்மையை உணரக்கூடும். " இந்நிறத்தன் இவ் வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதியுங் காட் டொணாதே " என்ற அப்பரெம்பெருமானார், " அவனருளே கண்ணாகக் காணினல்லால் இந்நிறத்தன் * * * காட்டொ ணாதே " என்று ஆண்டவன் அருளால் அவனுண்மை உணர்தலைத் தெரித்தல் காண்க. " அவனருளாலே அவன் தாள் வணங்கி " என்றார் மணிவாசகனாரும்.

ஆண்டவனருளால் அகக்கண் திறக்கப்பெற்ற மெய் யடியார்கட்கு இயற்கையினூடே ஆண்டவன் நீக்கமற

நிறைந்து நிற்றல் செவ்விதிற் புலனாகும். அக்கண் திறக்கப் பெறுதார்க்கு அந்நிறைவு புலனாதலில்லை. இறைவனுக்கு, இயற்கை உடலாகப் பொலிதலை மெய்யடியார்கள் சாத்திர வாயிலாகவும், தோத்திர வாயிலாகவும் உலகிற்குப் பலபட விளக்கிப் போந்தார்கள்.

அகக்கண்

இயற்கை இறைவன் வடிவம் என்பதை உணர்த்த உலகில் எழுந்த பாக்கள் எத்தனை! காவியங்கள் எத்தனை! நாடகங்கள் எத்தனை! அப் பாக்களையும் காவியங்களையும் நாடகங்களையும் படிக்கப் படிக்க, அவைகளின் அழகில் அறிவு படியப் படிய, கருவி கரணச் சேட்டைகள் ஒடுங்கி இயற்கை வடிவான இறை இன்பத்தில் திளைக்கும் பேறு பெறலாம். கதைகட்கு மட்டுங் காவியங்களைப் படித்தலால் விளையத் தக்க பயன் விளையாது.

காவியங்கள் முதலியன

இறைவன் இயற்கையை உடலாக் கொண்ட உயிர் என்பதை நந்தமிழ்ப் பெரியோர்கள் செவ்வனே உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கச் செய்திருக்கிறார்கள். அத் திருவாக்குகளில் இரண்டொன்று வருமாறு: "உலகமே வடிவமாக யோனிகள் உறுப்பதாக"—இஃது அருணந்தி சிவத்தின் திருவாக்கு. "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமா யட்ட மூர்த்தியாகிப், பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி, நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே"—இஃது அப்பர் தேவாரம். திருஞானசம்பந்தப் பெருமான் பலவிடங்களில் தமது பாக்களில் இயற்கையையும், இறைவனையும் அழகொழுகப் பாடியிருத்தல் ஈண்டுக்

இயற்கை இறைவனுடல்

கருதற்பாலது. இயற்கையாம் அன்னையையும் இறைவனும் அப்பனையும் திருஞானசம்பந்தர் தமது இனிய பண்ணிசைப் பாக்களில் ஓவியமாக வரைந்திருக்கிறார். இந்நோக்குடன் அவர் தேவாரப் பண்ணிசைப் பாக்களை ஆராயுமாறு அன்பர்களை வேண்டுகிறேன்.

" எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கடம்
புரமூன்று மெழிற்க ணுடி
உழுந்துருளு மளவையுனொள் ளெரிகொளவெஞ்
சிலைவளர்த்தோ னுறையுங் கோயில்
கொழுந்தரள நகைகாட்டக் கோகநத
முகங்காட்டக் குதித்து நீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வழிகாட்டு மிழலை யாமே "

" உரைசேரு மெண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
யங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டு பாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலை யாமே "

இத் திருப்பாட்டுகளை நோக்குக.

" தென்னா டுடைய சிவனே போற்றி - எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி " என்னுந் திருவாசகத்தை நமக்களித்த தமிழ்ப் பெருமானார் நமது மணிவாசகனாரும், இறையின் உடலாக இயற்கை இலங்குதலை இனிது ஓதியிருக்கிறார்.

" அம்பரமே நிலனே அனல் காலொ டொப்பா னவனே "

" நிலநீர் நெருப்புயர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ "

இம் மெய்ம்மொழிகளில் இறைவன் இயற்கையில் கோயில் கொண்டுள்ள ஒழுங்கை ஓர்க.

" இறைவன் இயற்கை வடிவினனாயின், எமக்கு அவ் விறைவனுண்மை புலனாகவில்லையே. எமக்கு இயற்கைத் தோற்ற மட்டுமன்றோ புலனாகிறது ?" என்று பெத்த நிலையி லுள்ள என் போன்றார் வினவலாம். எனக்குப் புலனாகாத எல்லாவற்றையும் பொய்யென்று யான் கூறுவது அறிவுடை மையாமா? உலகியற் பொருள்களிலேயே ஒருவர் உணர்ந் ததை மற்றொருவர் உணராது வாழ்கிறார். ஒன்றை உணராது வாழ்வோர், அவ்வொன் றன் உண்மையை மறுப்ப தழகாமோ? வான நூல் வல்ல ஒருவனுக்கு நிலத்திலுள்ள பல நுட்பங்கள் தெரிவதில்லை. அங்ஙனே நிலநூல் ஆராய்ச்சியுடைய ஒருவ னுக்கு வானக்கோள் நுட்பங்கள் பல தெரிவதில்லை. இதனால் அவன் நில நுட்பங்களை மறுத்தும், இவன் கோள் நுட்பங் களை மறுத்துங் கூறவேண்டுங்கொல்? மறுப்பதைப் பார்க் கினும் அவ்வத்துறைபற்றி உழைத்து உண்மை காண்டலே அறிவுடைமை.

மக்கள் அறியாமை

ஐஸ்லண்டின் இருப்பைப் பூகோள நூல் வாயிலாகவும், பிற வாயிலாகவும் அறிந்திருக்கிறோம். " ஐஸ்லண்டை யான் நேரே பாராது அதன் இருப்பை யான் ஏற்கமாட்டேன் " என்று ஒருவன் வாதம் புரிந்தால், நாம் என் செய்வது ? அவன் நிலைகுறித்து இரங்கவேண்டுவதே. ஒவ்வொன்றையும் ஒவ்வொருவருங் கண்ட பின்னரே நம்புவ

தென்பது இயலாததொன்று. சிலவற்றைச் சிலரே காண்பர். வேறுசிலர் அதை நம்பி ஆராய்ந்து உண்மை காணவே முயலல் வேண்டும். ஆராய்ச்சித் துறையில் நண்ணுதற்கு முன்னரே "அவநம்பிக்கை" என்னும் பேயை மணப்போர்க்குச் "சூந்யம்" என்னும் பாழுஞ் சேயே பிறக்கும். என் செய்வது?

நம்பிக்கை

பெத்த நிலையிலுள்ள என் போன்றார் "இறையுண்மை புலனாகவில்லையே" என்று அதனுண்மையை மறுத்து வாழ்தல் கூடாது. கண்ணுக்குப் புலனாகும் இயற்கையென்னும் உடலை ஆராய்ந்து உன்ன உன்ன இறையுண்மையில் ஐயந் தோன்றாது. அவ்வாராய்ச்சியான், முதலாவது ஐயத்தைப் போக்கும் ஒருவித உணர்வு பெறுதல் ஒருதலை. அவ்வுணர்வு இறை உண்மையை நிறுவிக் காட்டும். அவ்வுணர்வு கொண்டு மெய்யுணர்வு பெற முயலவேண்டுவது மகன் கடமை.

ஆராய்ச்சி

இயற்கையின் உள்ளுறையாய் ஒளிருஞ் செம்பொருளைக் காண்டற்கு நினைப்பற நினைக்கும் மெய்யுணர்வு வேண்டற்பாலது என்று மேலே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வுணர்வினர்க்கு இயற்கையினூடே இறை கோயில் கொண்டிருத்தல் புலனாகும். மற்றவர்க்கோ இயற்கை மட்டும் புலனாகும். இங்ஙனமாயின் மெய்யுணர்வு பெறாதார் கதி என்னை? அவர்கட்குக் கடவுள் காட்சி வேண்டாமா? அவர்கள் அக்காட்சியை எங்ஙனம் பெறுவது? அப்பேற்றிற்குரிய வழி யாது?

பருவுடல் உணர்வுடனும், உருவங்களையே கருதவல்ல கட்டுப்பட்ட மன உணர்வுடனும் வாழ்வோர், எங்கும் நீக்கமற நிறைந்துள்ள அகண்டத்தை - உறுப்பிலா ஒன்றை - மாற்ற மனங்கடந் தொளிரும் மணியை - எங்ஙனம் போற்றுவது? எங்ஙனம் வழிபடுவது? "இருநிலனாய்த் தீயாகி

நீருமாகி * * *'' ஆண்டவன் நிற்கிருனெனில், "எனக்குக் காடுஞ் செடியும் மலேயுங் கடலுமே தோன்றுகின்றன. அவைகளினூடேயுள்ள பொருளுண்மை எனக்குப் புலனுக வில்லே. யான் என் செய்வேன்'' என்றே கேட்பேன்.

இயற்கையினூடே இறையெனும் உயிரை நினேப்பற நினேந்து கண்ட பெரியோர்கள், தங்கள் அளவில் கடவுள் இன்பத்தைத் துய்த்துச் சென்ருர்களில்லே. அவர்கள் அருளாளர்கள்; "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்னுங் கருத்துடையார்கள். அவர்கள் பெத்த நிலேயிலுள்ள உயிர்களே மறந்தார்களில்லே. அவ்வுயிர்கள்மீது கொண்ட கருணேயாலன்ருே அவர்கள் மறை மொழிகளே உலகிற்கு உதவிச் சென்ருர்கள் ? நினேப்பற நினேந்து இறைவனல்லால் பிரிது மற்றின்மை கண்ட மணிவாசகனர் எற்றுக்குத் திருவாசகமென்னுந் தேனேச் சொரிந்தார் ? மற்றவர்களும் தேவாரம் திருவாய்மொழி முதலிய மறைகளே ஏன் அருளினர்கள் ? மெய்யடியார்கள் நமக்குப் புரிந்துள்ள உதவியை என்னென்று கூறவல்லேன்? என் ஒரு நாவால் கூறவல்லேனே?

பெரியோர்கள் இரக்கம்

அன்பர்களே ! தமிழ் நாட்டில் - தென்பாண்டி நாட்டில் - தூத்துக்குடியில் - சைவ சித்தாந்த சபையில் - நின்று பேசுதலால், தமிழ் நாட்டுப் பெரியோர்களேயுஞ் சைவப் பெரியோர்களேயும் அடிக்கடி குறித்து வருகிறேன். மற்ற நாடுகளில் தோன்றிய மெய்யடியார்களும் ஆண்டவன் அருள் பெற்றவர்களே. அவர்களும் மறைமொழிகளே வழங்கிச் சென்ருர்கள். அவர்களும் பெத்த நிலேயிலுள்ளவர்கட்குக் கால தேச வர்த்தமானங்களே யொட்டிப் பல முறைகள் கோலிச் சென்ருர்கள். உலகில் தோன்றிய அடியவர்கள் கோலியுள்ள முறைகளில் வேறுபாடிருத்தல் உண்மை.

பிறநாட்டுப் பெரியோர்கள்

ஆனால் அடிப்படையாகவுள்ள அறமுதலில் வேற்றுமை யில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முறைகள் எப்பொழுதும் காலதேச வர்த்தமானங்களை யொட்டி எழுவன. அவைகளில் வேற்றுமை யுறுதல் இயல்பு. அவ்வேற்றுமைகளையே சமயங்களாகக் கொண்டு போரிடுவது அறியாமை.

திறவு

நந் தமிழ்நாட்டிற் றோன்றி, ஆண்டவனுண்மையை யாண்டுங் கண்ட பெரியோர்கள் பெத்த நிலையிலுள்ள மக்கட்கு எவ்வழியில் துணை புரிந்தார்கள் என்பதே இப்பொழுது எடுத்துக்கொள்ளவேண்டிய பொருள். இறைவன் திரு உருவோ "உள்ளப்படாதது." "உள்ளப்படாத திருஉருவை"க் கட்டுப்பட்ட உள்ளமுடையோர் எங்ஙனம் உள்ளுவது? நேயர்களே! இங்கேதான் சைவ சமயத்தின் திறவு இருக்கின்ற இடம். இத் திறவுகொண்டே சைவக் கோயிலெனும் இயற்கைக் கோயிலின் வாயிலைத் திறந்து எந்நாட்டவர்க்கும் இறைவனாகவுள்ள தென்னாடுடைய சிவனைக் காணல் வேண்டும். அத்திறவு எது?

பெரிய உருவங்களைச் சிறிய உருவங்களாகவும், சிறிய உருவங்களைப் பெரிய உருவங்களாகவுங் காட்டுங் கருவிகளிருத்தல் நமக்குத் தெரியும். வானத்துள்ள கோள்களின் அளவுப் பெருக்கை உன்னிப் பார்ப்போம். அப்பெருக்கை என்னென்று கூறுவது?

நாம் வாழும் பூமியைப் பார்க்கினும் பருமனுள்ள கோள்களிருக்கின்றன. அத்தகைக் கோள்கள் அணித்தே தோன்றுவது போல, அவைகளைக் காட்டுங் கருவிகள் காணப்பட்டிருக்கின்றன. அளவிலே பூமியினும் பருத்து விளங்குங் கோள்களைப் படமெடுத்தும், ஓவியமெழுதியும்

இப்பூமியில் மாணுக்கர்கட்கு அவைகளின் நுட்பங்கள் அறிவுறுத்தப்படுகின்றன. முதலில் படத்தில் ஓவியத்தில் கோள்களைக் காணும் மாணுக்கன், பின்னே கருவிகள் வாயிலாகவும், பிற வாயிலாகவும் இயற்கைக் கோள்களைப் பார்த்துப் படிக்கப்போகிறான்.

நமது உடலளவை முன்னே நோக்குவோம். பின்னே கோள்களின் வடிவங்களை உணர்த்துங் கருவியின் முன்னே நின்று நமது உடலளவை நோக்குவோம். அந்தோ! முன்னதற்கும் பின்னதற்கும் எத்தனை வேற்றுமை! அணுவுக்கும் மலைக்கும் உள்ள வேற்றுமை! துளிக்கும் கடலுக்கும் உள்ள வேற்றுமை! "பெரும் பெரும் மலைகளும், பெரும் பெருங் காடுகளும், பெரும் பெரும் மேக மண்டலங்களும் ஒன்றோடொன்று பின்னித் தொடர்ந்து கிடக்கும் ஒரு வடிவோயாம்" என்னும் நினைவுந் தோன்றும். நமது உடற் பருமை நமது எண்ணத்தையுங் கடந்தோடுகிறது.

சிலர் தமது வடிவை அணுவுருவாகப் படமெடுத்து அதை மோதிரக்கல்லின் அடியில் பதித்து, அடிக்கடி அதைப் பார்த்துப் பார்த்து மகிழ்வுறுவதுண்டு. மோதிரத்தில் மனிதனுடல் எத்துணைச் சிறிய அணுவாகக் காட்சியளிக்கிறதென்பது கருதற்பாலது. இன்னும் உலகியல் எடுத்துக்காட்டுகள் வேண்டுவதில்லை. இவ்வளவில் நின்று எடுத்த பொருண்மீது செல்கிறேன்.

இறைவன் அங்கிங்கெனுதபடி எங்கும் நீக்கமற இயற்கையினூடே நிற்கிறான். உள்ளப்படாத அவன் உருவை என்போன்றார் எங்ஙனம் உள்ளுவது? என் போன்றோர் அப் பெருவடிவை உள்ளும் முறையில், நினைப்பற நினைந்து இறைவனல்லால் பிறிது மற்றின்மை கண்ட அகக்கண்ணாளர்கள் அருள்வழி கோலியிருக்கிறார்கள். அவ்வழியே சைவ சமயத்தின் திறவு என்க.

ஆண்டவனது அகண்டாகாரத்தை ஒவ்வொரு பெரியார் ஒவ்வொரு விதமாகப் படமெடுத்து நமக்கு வழங்கியிருக்கிறார். அவ்வடிவைப் பெருக்கிப் பெருக்கிச் சென்றால் இறைவனது இயற்கையகண்டம் உணர்வில் விளங்கும். பெருக்கிச்செல்லும் அவ்வழியே, வழிபாடென்பது. மனிதனிடத்திலுள்ள அழுக்காறு அவா வெகுளி முதலியன ஒடுங்க ஒடுங்க ஆண்டவன தகண்டம் படிப்படியாக விளங்கிக்கொண்டே போகும். இறைவன் திருவுருவ விளக்கம் மனிதனது தீநீர்மை விலக்கின் அளவைப் பொறுத்து நிற்கிறது.

அகண்டாகாரப் படம்

இறைவனது உள்ளப்படாத திருவுருவைப் படம் பிடித்த பெரியோர் பலர். அவருள் முதலில் திருஞான சம்பந்தரை எடுத்துக் கொள்வோம். அவர் இறைவன் இயற்கை வடிவை எங்ஙனம் உலகிற்கு விளக்கிக் காட்டினர் என்பதைச் சிறிது ஆராய்வோம். திருஞானசம்பந்தர் ஆண்டவனருளால் ஆண்டவனது உருவற்ற நிலையை உணர்ந்தவர். அவர் ஆண்டவன் அறிவாய் யாண்டும் நீக்கமற நிறைந்திருத்தலை அறிந்தவர்.

திருஞான சம்பந்தர்

" இன்னவுரு இன்னநிறம் என்றறிவதேல் அரிது "

எனவும்,

" புவி முதலைம் பூதமாய்ப் புலனைந்தாய் நிலனைந்தாய்க் கரணநான்
அவையவை சேர் பயனுருவாய் அல்ல வுருவாய் நின்றன் " [காய்

என வரூஉம் அவர் திருவாய் மொழிகளை நோக்குக.

இப் பெருவடிவைப் பெத்த நிலையிலுள்ள மக்கள் எங்ஙனம் ஆராய்வது? பெத்த நிலை ஆராய்ச்சி நாத்திக உணர்வையே நல்கும். அவ்வுணர்வு மக்களிடை அரும்பாதவாறு

காக்க ஞானசம்பந்த வள்ளல் கருணையால் வாய்மலர்ந்த அருள்மொழிகள் பல உண்டு. அவைகளில் இரண்டொன்று வருமாறு :—

" ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்கத் தக்கார்."

" ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே."

இத் தேவாரங்களால் இறைவன் இயல்பு, புலனறிவு ஆராய்ச்சி ஏதுக்களில் அடங்காத ஒன்று என்பதும், புலனறிவிற்கெட்டும் ஒன்றை மட்டும் உணரக்கூடிய பெத்த நிலையிலுள்ளார் தமது கட்டுப்பட்ட அறிவுகொண்டு, மாற்ற மனங்கடந்து நிற்கும் ஒன்றை உணர இயலாதென்பதும், ஐயந்திரிபு வழிகளில் நுழையாது வழிபாட்டி லிறங்குதல் அறிவுடைமை என்பதும் பெறப்படுதல் காண்க. இது குறித்து முன்னருஞ் சில உரை பகர்ந்துளேன். அவைகளை மீண்டும் ஈண்டுத் திருப்பிக்கூற வேண்டுவதில்லை. ஈண்டு நாம் வேண்டி நிற்பது ஒன்றே. அஃதென்னை? மாற்ற மனங்கடந்து, இயற்கையை உடலாக் கொண்டு, தென்னாடுடைய சிவனாய், எந்நாட்டவர்க்கும் இறைவனாய் நிற்குஞ்

வழி

செம்பொருளைப் புலனறிவில் கட்டுப்பட்டுக் கிடப்போர் எங்ஙனம் உன்னுவது என்பதேயாகும். அதற்கு ஞானசம்பந்தப் பெருந்தகையார் "கேட்பான்புகில் அளவில்லை" என்றும், "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் - சோதிக்க வேண்டாம்" என்றும்,

மக்கட்கு அறிவு கொளுத்தி, "தாட்பால் வணங்கித் தலை நின்று" என்றும், "மனம் பற்றி வாழ்மின்" என்றும் வழி காட்டுகிறார்.

எதைக்கொண்டு "தாட்பால் வணங்குவது?" "மனம் பற்றுவது?" அதற்குப் பெருமான், உள்ளப்படாத ஆண்டவன் திருவுருவை என் போன்றார் உள்ளும் முறையில் படம் பிடித்துத் தருகிறார். அப்படம் ஆண்டவனது அகண்ட இயற்கை வடிவின் இயல்பைத் தன்னகத்தே கொண்டதென்க.

திருவுருவப் படம்

"தோடுடைய செவியன் விடையேறி ஓர்தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங் கவர்கள்வன்"

இத் தேவாரப்பட்டத்தை உற்றுஉற்று நோக்குவோம்; ஊன்றி ஊன்றி உன்னுவோம். இறைவனை "இன்னவுரு இன்னநிறம் என்றறிவ தேல்அரிது" என்று கூறிய ஞான சம்பந்தர் - "புவி முதல் ஐம்பூதமாய் * * *" என்று புகன்ற ஞானசம்பந்தர் - அவ்விறைவனை ஈண்டுத் "தோடுடைய செவியன் விடையேறிஓர் தூவெண்மதிசூடி - காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங் கவர்கள்வன்" என்கிறார். இதன் நுட்பமென்னை? உள்ளப்படாத இறைவன் திருவுருவம் பெத்தர்கள் உள்ளத்தில் படியுமாறு ஞான சம்பந்தர் அருள் செய்திருக்கிறார்.

கோள்களைப் பற்றியும் அவைகளின் படங்களைப் பற்றியும் மேலே யான் புகன்ற உரைகளை ஈண்டு நினைவூட்டிக்கொள்ளுங்கள். இறைவனை "இன்னஉரு இன்னநிறம் ஒன்றுமில்லாதவன்" என்று உன்னும் போது எனது உள்ளத்தில் என்ன படிகிறது? ஒன்றும் படிவதில்லை. அவ்விறைவனைத் "தோடுடைய செவியன் விடையேறி * * *" என்று நினைக்கும்

திருவுருவம்

போது எனது உள்ளத்தில் இறைவன் வடிவம் படிகிறது. இத் திருவடிவே பெரியோர்களால் உலகிற்கு வழங்கப்பெற்ற அருள்வடிவம்.

"எங்குமுள்ள ஆண்டவனை இப்படியா நினைப்பது? அஞ்ஞானம் அஞ்ஞானம்" என்று சிலர் கருதலாம். அம் "மெய்ஞ்ஞானிகளைப்"ப் பற்றிய பேச்சே ஈண்டு வேண்டுவ தில்லை. உணர்வு கடந்த ஒன்றை உணர்வு கடந்து உணரும் நிலை கூடும்வரை, உருவ வழிபாடு இன்றியமையாது வேண்டற்பாலதே. இக்கருத்துக் கொண்டே மெய்யடியார் கள் உருவ வழிபாட்டைப் பெரிதும் உலகிற்கு வலியுறுத்திச் சென்றார்கள். இல்லையேல் வாயால், "அங்கிங் கெனாதபடி எங்குமுள்ள கடவுள்" என்று சொல்லிக்கொண்டே, மனதில் சூந்ய உணர்வுடன் வாழ்தல் நேரும்.

உருவ வழிபாடு

மனம் பற்றி நிற்பதற்கு ஒன்று வேண்டும். அவ் வொன்றே உருவ வழிபாடு. மனதைக் கவரும் அவ்வுருவம் எத்திறத்ததாகவும் இருக்கலாம். அதைப்பற்றிய கவலை எவ ருக்கும் வேண்டுவதில்லை. எவ்வுருவு கொள்ளினும் அவ் வுருவை இறைவன் திருப்படம் என்றுமட்டுங் கொண்டால் போதும். ஆனால் ஒருவன் தொடக்கத்தில் ஆண்டவன் நிலையிலே பல உருவங்களை நினைத்தல் தவறு. ஒவ்வொருவரும் தமது மனதைக் கவரும் ஓர் உருவையே ஆண்டவன் நிலையில் கொண்டு போற்றுதல் சிறப்பு. இதைப்பற்றி ஈண்டு விரிவுரை வேண்டுவதில்லை.

ஒரே உருவம்

இயற்கையை உடலாகக் கொண்ட இறைவனைக் குறிக் கும் எப்படத்தையும் நல்லறிவு கொண்டு ஆராய்ந்து அதைப் பெருக்கிப் பார்த்தால், அஃது இயற்கையின் பரவலாக முடிதல் பெறலாம். அதைப் பெருக்கிப் பார்க்கும் அறிவு விளக்கம் அவரவர் நிலையைப் பொறுத்து நிற்கிறது. உலகில்

பலவிடங்களில் தோன்றிய அருளாளர்கள் பிடித்த தெய்வப் படங்கள் யாவும் பெருக்கப்படும்போது, அவை, இறைவன் இயற்கை வடிவாக முடியுமென்பதில் ஐயமில்லை. 'இயற்கை இறைவன் வடிவம்' என்னும் உணர்வில்லாதார் ஒவ்வொரு தெய்வப் படத்தையும் ஒவ்வொரு தெய்வமாகக் கருதி இடர்ப்பட்டு மெய்ப்பொருளை உணராதொழிவர். ஈண்டு ஞானசம்பந்தர் பிடித்துக்கொடுத்த ஒரு படத்தைப் பார்ப் போம்.

திருவுருவ விளக்கம்

"தோடுடைய செவியன்"—இங்கே தோடு எது? தோடு என்பது பெண்மக்கள் அணியும் ஒருவிதக் காதணி.

தோடுங் குழையும்

ஆண்மக்கள் அணியுங் காதணிக்குக் குழை யென்று பெயர். ஞானசம்பந்தர் "தோடு டைய செவியள்" என்று கூருது "தோடு டைய செவியன்" என்று கூறியிருக்கிறார். இம்மயக்கத் தைக் களைந்து கொள்வோம்.

இறையின் வடிவம் செம்மை நெருப்பு என்று மேலே சொல்லப்பட்டது. செம்மையின் விளிம்பில் நீலமிருத்தலைக்

செம்மை நீலம்

காண்கிறோம். செம்மைக்கும் நீலத்துக்கும் உள்ள தொடர்பு நிறத்தியல் வல்லார்க்கு நன்கு தெரியும். செம்மையில் நீலமும் நீலத்தில் செம்மையும் மிளிர்தல் இயல்பு. எல்லா நிறங்களும் இவ்விரண்டில் ஒடுங்குதலும் ஈண்டுக் கருதற்பாற்று.

செம்மை எது? நீலம் எது? செம்மை, வெம்மையைக் குறிப்பது; நீலம், தண்மையைக் குறிப்பது. வெம்மை (Heat) தண்மை (Cold) என்னும் இரண்டானும் உலகம் ஆக்கப்பட்டு இயங்கிவருகிறது. இவ்வெம்மை ஆணென் றும், தண்மை பெண்ணென்றும் உள்ளத்தில் பதியுமாறு

உருவகிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ள இறைவன்பால் வெம்மைக் கூறும் உண்டு; தண்மைக் கூறும் உண்டு. வெம்மைக் கூற்றை ஆணென்றும் தண்மைக் கூற்றைப் பெண்ணென்றும் ஆன்ருேர் கூறிப் போந்தனர். அக்கூறுகளின் பரிணுமமாக உலகமிருத்தல் கண்கூடு.

உலகம் பெண்மயமா யிருக்கிறதா? ஆண்மயமா யிருக்கிறதா? உலகம் பெண் ஆண் மயமாயிருத்தல் கண்ணுள்ள எல்லார்க்குந் தெரியும். காரியமாய உலகம் பெண் ஆண் மயமா யிருப்பதைக்கொண்டு காரணமாய கடவுள் பெண் ஆண் மயமாயிருத்தலே கிறுவக்கூடும். இதைப்பற்றிப் "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணே" என்னும் நூல் தொடக்கத்தில் விரித்துக் கூறியுள்ளேன். விரிவு ஆண்டுக் காண்க. தண்மை வெம்மையெனும் பெண் ஆண் மயமாக முழுமுதற் பொருளிருத்தல் ஒன்றே ஈண்டைக்கு வேண்டுவது. ஆண்டவனே அப்பன் என்று போற்றுவோர், அவனே அம்மை என்று போற்றினுல் என்ன இழுக்கு நேரும்? இது நிற்க.

உலகம் பெண் ஆண் மயம்

இயற்கையின் வடிவாக உள்ள இறைவன் தண்மை வெம்மையெனும் பெண் ஆண் மயமாக இருத்தலே உணர்ந்த ஞானசம்பந்தப் பெருமான் அந்நுட்பத்தை, "தோடுடைய செவியன்" என்று பாட்டுப் படமாக வரைந்து காட்டுகிருர். "தோடுடைய செவியன்" என்பது இயற்கை இறையின் பெண் ஆண் தன்மையை விளக்கும் எழுத்தோவியம் என்க. இவ்வோவியத்தைப் பெருக்கிப் பார்த்தால் அது தண்மை வெம்மையாகப் பொலியும் வாக்குமனங் கடந்த இறைவனது இயற்கை வடிவத்தை உணர்த்துதல்

இறையின் பெண் ஆண் கூறு

பெறலாம். இவ்வியற்கைப் பெருவடிவை மணிவாசகனூர் தமது முதிர்ந்த மதியால் தமது கனிந்த மனதில் எழுதிய ஓவிய மொன்றை ஈண்டுத் தருகிறேன்.

“ தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.”

இயற்கையின் தண்மை வெம்மை என்று சொல்லால் பிரித்துக் கூறலாமே யன்றிப் பொருளால் பிரித்துக்கூற இயலாது. வெம்மையில் தண்மையும், தண்மையில் வெம்மையும் பிரிவின்றிக் கிடக்கின்றன. அவை இரண்டும் ஒன்றன் கூறுபாடுகள். அப் பிரிவின்மையை உணர்த்தவே “ தோடு ” என்று பெண்மையையும், “சேவியன் ” என்று ஆண்மையையும் ஆளுடைய பிள்ளையார் பொறித்திருத்தல் காண்க.

“ தோடுடைய செவியன் ” என்னும் எழுத்தோவியத்தை - அன்பர்களே - நினைந்து பாருங்கள் ; அதை அறிவால் பெருக்கிப் பாருங்கள் ; அதை “ இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங் காற்றுமாகி - அருநிலைய திங்களாய் ஞாயிறாய் ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி * * * ” இறைவன் நிற்கும் பெருநிலையென் றுணருங்கள். ஆ! ஆ! அப் பெருவடிவை என்னென்று பேசுவது ?

“ அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக
அம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்பர்—அம்மையப்பர்
எல்லா வுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்தும்
அல்லார்போ னிற்பா ரவர். ”

“ ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்

தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு ''

என்றார் உய்யவந்த தேவ நாயனார்.

பேச்சுக் கடந்த அப் பெருவடிவைச் "செல்வன் கழலேத்துஞ் செல்வம்" பெற்ற நமது ஞானசம்பந்தச் செல்வம் "தோடுடைய செவியன்" என்று நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

"தோடுடைய செவியன்" என்பது இயற்கை வடிவின் இருபெருங் கூறுகளை அறிவிப்பதென்க. இனித் தோடு முதலிய உறுப்புக்களைப்பற்றிச் சிறிது ஆய்வோம்.

தோடு என்பதைப் பெருக்கிப் பார்த்தால் அஃது எது வாக முடியும்? அஃது ஓங்காரமாக முடிதல் பெறலாம்.

தோடு ஓங்காரம்

"தோடு" என்பதிலுள்ள முதலெழுத்துத் தகர வித்தையோடு கூடிய ஓங்காரத்தைக் கொண்டிருத்தல் கருதற்பாலது.

எல்லாவற்றிற்கும் அடிப்படை ஓங்கார ஒலி என்பதை விளக்கவேண்டுவதில்லை. ஒலியைப் பற்றிய ஆராய்ச்சி இந்நாளில் முதிர்ந்து வளர்ந்து வருகிறது. இவ்வண்டமெலாம் ஒலியென்னும் ஒன்றை நிலைக்களனாகக் கொண்டிருக்கின்றன. ஒலி யாண்டில்லை; இப்பொழுது யான்

ஒலி

இங்கே பேசுகிறேன். இப் பேச்சொலி யாண்டும் முழங்குகிறது. அதைக் கருவி கொண்டு கேட்டுணரல் கூடும். வேம்பிலி பொருட்காட்சியில் நமது அரசர் பெருமான் பேசியது உலகில் பலவிடங்களில் கேட்குமாறு செய்விக்கப்பெற்ற அருமையை நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். கம்பியில்லாத் தந்தியால் ஒலியின் இயல்பும் திறனும் பிறவும் செவ்வனே விளங்குகின்றன.

கருவி காணப்பெருத காலத்திலுஞ் சிலர் சேய்மையில் பேசப்படுவதைச் செவியினுல் உணர்ந்து வந்தனர். இப் புலனறிவு இப்பொழுது பெரிதும் வீழ்ந்துபட்டது. சேய் மையில் பிறர் பேசுவதை மட்டுமன்று - பிறர் நினைப்பதை யும் - உணரும் ஆற்றல் சிலர் பெற்றிருந்தனர். இந்நாளில் மேல்நாட்டில் இப்பயிற்சி சிலவிடங்களில் அரும்பி வருகிறது.

கருவியின்றிச் சேய்மையொலி கேட்டலைப் பற்றிச் சிலர் வியப்புறலாம். சேய்மையொலியைக் கேட்பிக்குங் கருவி காணப்படுவதற்கு முன்னர் "கருவியால் சேய்மை யொலியைக் கேட்கக்கூடும்" என்று எவராவது சொல்வ ரேல், அச்சொல் ஏற்றுக்கொள்ளப் பெறுதல் அருமையே. இஃதுலகியல்.

ஒலியின் நுட்பத்தை நம் முன்னேர்கள் செவ்வனே உணர்ந்திருந்தார்கள். ஒலியின் பெற்றி நோக்கியே அதைச் "சப்த பிரமம்" என்றுஞ் சில அறிஞர் கூறிப் போந் தனர். "ஓசை ஒலியெலாம் ஆனுய் நீயே" என்ருர் நமது அப்பரும்.

ஒலி ஆகாயத்தின் கூறு. ஆகாயம் என்னும் பூதம், எல்லாப் பூதங்களினும் பாய்ந்து விரவி நீக்கமற நிறைந்து நிற்பது. ஆகாயமில்லாத பூதமுமில்லை; இடமுமில்லை. ஆகவே ஒலியில்லாத இட மில்லையென்று சுருங்கக் கூறலாம்.

ஆகாயம்

பாரிடை ஐந்தாய்ப் பறந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்ருய் விளைந்தாய் போற்றி

எனவரூஉந் திருவாசகத்தை ஓர்க.

பாரிடை ஐந்து - சப்தம் ஸ்பரிசம் ரூபம் ரசம் கந்தம் (ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம்). நீரிடை நான்கு - சப்தம் ஸ்பரிசம் ரூபம் ரசம். தீயிடை மூன்று - சப்தம் ஸ்பரிசம் ரூபம். வளியிடை இரண்டு - சப்தம் ஸ்பரிசம். வெளியிடை ஒன்று - சப்தம். எல்லாப் பூதங்களிலு மிருப்பது சப்தம். யாண்டுமுள்ள ஒலி என் யாண்டுங் கேளாது? கேட்குமெனில் கருவி எற்றுக்கு?

சப்தம்

ஐம்பூத உடலுடன் ஐம்பூத உலகில் வாழும் மனிதன் முயன்று முயன்று ஐம்பூதக் கூறுகளை ஆராய்தல் வேண்டும். "சுவைஒளி ஊறுஓசை நாற்றம்இவ் வைந்தின் - வகை தெரிவான் கட்டே உலகு" என்றார் வள்ளுவனார். இவ் வாராய்ச்சியில் தலைப்படாது வாளா கிடப்போர்க்கு ஒலி யின் நுட்பம் எங்ஙனம் புலனாகும்? இந்நாளைய வாழ்வு அவ்வாராய்ச்சியில் தலைப்படவுந் துணைபுரிதலில்லை.

பனிக்கட்டி போன்ற பருவுடலில் கட்டுப்பட்ட அறி வுடன் வாழ்வோன், தனிப்பட்ட ஆகாய தத்துவத்தில் எங் ஙனம் உலவ வல்லான்? அவன் ஆகாயங் கலந்த ஏனைய பூதங்களில், சிறப்பாகப் பெரிதும் மண்ணெனும் பூதத்தி லேயே கட்டுப்பட்டுக் கிடக்கிறான். அவன் ஸ்பரிச ரூப ரச கந்தங்களுடன் விரவி, மருவியுள்ள ஒலியை மட்டும் அணித்தே யிருந்து கேட்க வல்லான். சேய்மையிலுள்ள ஒலியை உணரும் ஆற்றலை அவன் செவிப்புலன் பெற வில்லை. இக்காரணத்தால் மனிதன் சேய்மையொலி கேட்கக் கருவி நாடுகிறான். மண் முதலிய தத்துவங்களினூடே வாழும் மனிதன், ஆகாய தத்துவத்தில் தனித்துலவுதற்குரிய வழிகள் காணப்பட்டிருக்கின்றன. அவ்வழி நிற்போர்க்குச் சேய்மையிலெழும் ஒலியுங் கேட்கும்.

ஆகாயத்தின் கூறாகவுள்ள ஒலிக்கு நிலைக்களன் எது? அதுவே ஓங்காரமென்பது. "ஓமெனும் ஓரெழுத் துண்

ணின்ற ஓசை போல்" என்றார் திருமூலர். அவ்வோங்காரத்தி னின்றுமே எல்லாம் பிறக்கின்றன.

ஓங்காரம்

"ஓங்காரத் துள்ளே உதித்த ஐம்பூதங்கள் - ஓங்காரத் துள்ளே உதித்த சராசரம்" எனவரூஉந் திருமூலர் திருவாக்கை நோக்குக. இவ்வோங்காரத்தை அதிட்டித்தே அறிவெனுஞ் சிவம் அண்டாண்டங்களை இயக்கி வருகிறது. இத்தகை ஓங்காரத்தை மனதினால் அளந்து கூற முடியுமோ? அன்பர்களே! உன்னுங்கள். அவ்வோங்காரம் மனதிற் படுமாறு அதைச் சிறிய "தோடாக" வடித்துக் காட்டுகிறார் நமது திருஞானசம்பந்தர்.

ஆண்டவன் இயற்கைப் படத்தில், அவ்வியற்கையுடலின் உறுப்புக்களும் படத்தின் அளவிற்கேற்ற வண்ணம் அரும்புகள் போல் பொலிதல் வேண்டுமன்றோ? இதோ எல்லாப் பூதங்கட்கும் நிலைக்களனாக உள்ள ஓங்காரம் ஞான சம்பந்தர் எழுதிய பாட்டோவியத்தில் "தோடாக"க் காட்சியளித்தலைக் காணுங்கள். அத்தோட்டைப் பெருக்கிப் பெருக்கிச் சென்றால் அஃது ஓங்காரமாக முடியும். இயற்கை இறைவன் ஓங்காரமே, ஓவிய இறைவனது தோடென்க.

ஓங்காரமே தோடு

இனி "விடையேறி" என்னும் நுட்பத்தை ஆய்வோம். அன்பர்களே! எதற்குங் காரண காரியமுண்டு. காரணம் நுண்மை; காரியம் பருமை. நுண்மை சூட்சுமம், சமஷ்டி எனவும்படும். பருமை ஸ்தூலம் வியஷ்டி எனவும்படும். ஓங்காரமும் சமஷ்டி வியஷ்டி என்று பிரிகிறது. இதுகாறுங் கூறிவந்த ஓங்காரம் சமஷ்டியெனும் முதல், அதாவது நுண்மை. அதன் அறிகுறியே "தோடு" என்பது. அதன் வியஷ்டியையும் அதாவது பருமையையும் ஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார். எங்ஙனம் குறிப்பிடுகிறார்? உள்ளத்தில் பசுமரத்

சமஷ்டி வியஷ்டி

தாணிபோல் பதியுமாறு ஓர் அழகிய உருவத்தில் அதைப் பெருமான் குறிப்பிடுகிறூர்.

"விடையேறி" என்பதைக் கூர்ந்து நோக்குவோம். "விடை" வியஷ்டியின் அறிகுறி என்க. சிவபெருமான் விடையில் வீற்றிருக்குங் கோலத்தை மனதில் உருவகித்துக் கொள்வோமாக. திருவாசியோடு கூடிய விடை அளிக்குங் காட்சியை உன்னுவோமாக. ஓங்கார நிலையை "விடையேறி" என்று ஞானசம்பந்தர் படம்பிடித்துக் காட்டுகிறூர்.

விடை

"அறத்தை அறிவுறுத்துவது விடை என்று சில நூல்கள் கூறுகின்றனவே. அஃதென்னை" என்று சிலர் ஐயுறலாம். இயற்கை நியதியே அறமென்பது. அவ்வியற்கையின் காரியப் பாட்டுக்கு நிலைக்களனுக நிற்பது ஓங்காரம். எனவே ஓங்காரம் அறக்கோடாக நிற்பதாகிறது. அதை அறிவிக்க விடையை அறமென்று நூல்கள் கூறுவது பொருத்தமேயாகும். ஆண்டவன் அறக்கோட்டில் நின்றுகொண்டே அருட் கடனுற்றுகிறுன். அதனை "விடையேறி" என்று ஞானசம்பந்தர் நமது மனதில் படியச் செய்கிறூர்.

விடை அறம்

"விடையேறி" என்பது இறைவன் ஓங்காரத் துள்ளொளியா யிருக்கிறுன் என்பதைத் தெரிவிப்பதென் றுணர்க. "உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற - மெய்யா விமலா விடைப்பாகா" என்று மாணிக்கவாசகனுர் ஓதியிருத்தலைக் காண்க.

விடையின்பால் பல நறுங்குணங்களுண்டு. அவைகளை விரித்துக்கூற வேண்டுவதில்லை. விடை "அம்மா" என்று அழைகொலி செய்கிறது. "அம்மா" என்னும் ஒலி எத்தகை மகிழ்ச்சி யூட்டுகிறது! அன்பர்களே! நினைந்து பாருங்கள்! அவ்வொலி கேட்கும்

அம்மா

போது உள்ளம் அடையுங் குளிர்ச்சியை - மகிழ்ச்சியை - என்னென்று சொல்வேன்!

தோற்றத்துக்குரிய தாய் அம்மையல்லளோ? அவ் வம்மை யல்லளோ இயற்கைத் தாய்? அவ்வியற்கையின் முதற்காரணம் அல்லது தாயகம் ஓங்காரமன்றோ? ஓங்காரம் சக்தியின் கூறு என்று ஞான நூல்கள் முழங்குகின்றன. விடையின் "அம்மா" என்னும் ஒலியில் அத் தாய்மை விளங்குகிறதா? இல்லையா? உன்னுங்கள்; உன்னுங்கள்.

ஓங்காரத்தின் முதல் எது? அகரமென்று எவருங் கூறுவர். அவ்வகரமன்றோ எல்லாம்; எல்லாம்! அவ்வகர ஒலி முழக்கத்தையே இயற்கை அடிப்படையாக் கொண்டு இயங்கலான், அவ்வகரத்தை முதலாக் கொண்டு வியஷ்டி யாக எழும் ஓங்காரத்துக்கு விடையை அறிகுறியாக நம் முன்னோர்கள் கொண்டார்கள்.

கடவுள் உண்மைக்கும் கடவுள் நினைவிற்கும் இயற்கைப் பொருள்களைக் கோடலே அறிவுடைமை. விடையுடன் மக்களுக்குள்ள தொடர்பைக் கூறுதல் வேண்டுமோ? நமது நாட்டில் நமது வாழ்வுடன் விடை எவ்வளவு கலப்புற்றிருக் கிறது? நமது வாழ்வுடன் கலப்புற்றுள்ள ஒன்றைக் கடவு ளியல்பின் கூறுபாட்டிற்கு அறிகுறியாக நம்மவர்கள் கொண்டது பெரிதும் உன்னத்தக்கது. விடையைப்பற்றி இன்னும் விரிக்கிற் பெருகும்.

இவ்வாறு ஒவ்வொன்றையும் விரித்துச் சென்றால், காலம் இடந்தாராதாகலான், இனிச் சுருக்கிக் கூறவே முயல்கிறேன். ஞானநூல்களை ஆராய ஆராய அவரவர் அறிவாற்றலுக் கேற்றவாறு இத்தகை நுட்பங்கள் பல உணரக்கூடும்.

"ஓர் தூவெண்மதி சூடி" இதன் உள்ளக்கிடக்கையை நோக்குவோம். இயற்கையைப் போர்வையாக் கொண்

டுள்ள இறைவன் அறிவு மயமாய் எல்லாவற்றையும் அறிபவனு யிருப்பவன். அது தூவெண் மதியால் விளக்கப் படுகிறது. அறிவுக்கு நிலைக்களன் மூளை என்பதும் ஈண்டுக் கருதற்பாலது.

மதி

"தூவெண்மதி" தூநெறியென்னும் அறிவு ஒளிக்கு அறிகுறி என்க. "தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி - யாமதி யானென அமைத்த வாறே" என்று பதினோராந்திருமுறை பகர்தல் காண்க.

"காடுடைய சுடலைப் பொடி பூசி" என்பதன் கருத்தைச் சிறிது பார்ப்போம். சிவபெருமானுக்குச் "சுடலையாடி" என்றொரு பெயருண்டு. சுடலையென்று எதற்குப் பெயர்? இறந்த உடலங்களைச் சுட்டுச் சாம்பராக்குமிடத்துக்குச் சுடலை என்று பெயர். இறைவனுஞ் சிவனுக்கு இயற்கையுட லென்று மேலே பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. உடலாகிய இயற்கை பல வடிவங்களாகப் பரிணமிக்கிறது. அப் பரிணாமமே நமது கண்ணுக்குப் புலனாகும் பலதிற இயற்கைப் படிவங்கள்.

சுடலையாடி

நாமரூபங்கள், என்றுதல் ஒருபோது அழிதன்மாலையன. "தோற்ற முண்டேல் மரண முண்டு" என்பது மறைமொழி. இயற்கை, இறைவன் வடிவாதலால், அஃது அரும்பி மலருங் (பரிணமிக்கும்) காலத்தும் இறைவனுக்கு உடலாகவே யிருக்கிறது; அம்மலர்ந்த வடிவங்கள் தன்னகத்தே ஒடுங் கும்போதும் அஃது (இயற்கை) இறைவனுக்கு உடலாகவே யிருக்கிறது. இயற்கை இறையுடலாதலால், அது மலரும் போதுங் குவியும்போதும் வேறிடம் புகுதல் இல்லை. இயற்கையின் நாமரூபப் பரிணாமங்கள் அழிந்து பொடி யாகிச் சாம்பராகும்போது, அச்சாம்பர் இறைவனை விடுத்து எங்ஙனம் அகலும்? ஆகவே எல்லாம் ஒடுங்கும் ஓரிடமே

இறைவனது சுடலை என்க. ஒடுங்கின யாவும் நின்று மீண்டும் பரிணமித்தற்கு நிலைக்களனாக உள்ள ஒன்றே சத்தெனுஞ் செம்பொருள்.

சத்தெனுஞ் செம்பொருள் சடமன்று; அஃது அறிவுப் பொருள். அறிவுக்குத் தோற்றக் கேடுகளில்லை. தோற்றக் கேடில்லாத ஒன்றனிடத்தன்றோ தோற்றக் கேடுள்ள எல்லாம் இறுதியில் ஒடுங்கி நிற்கும்? அத் தோற்ற ஒடுக்கத்துக்குத் தோற்ற ஒடுக்கமில்லாத ஒன்றன் துணை இன்றியமையாத தென்று சொல்லவும் வேண்டுமோ? அறிவுத் துணையின்றிச் சடம் எங்ஙனம் இயங்கும்? அறிவெனும் இறைவன் துணையால் இயற்கையினின்றும் வடிவங்கள் தோன்றுகின்றன; ஒடுங்குகின்றன.

தோற்ற ஒடுக்கம்

நாமரூப ஒடுக்கமென்னுஞ் சுடுகாட்டினின்றும் மீண்டும் நாமரூபங்களை உண்டுபண்ண ஒலி என்னும் ஓங்கார முதலைத் தூண்டுவது அறிவின் வேலை. இதனையும் பெரியோர்கள் உருவகப்படுத்தி உலகிற்கு வழங்கி யிருக்கிறார்கள். "கங்காளராய் நின்று வருங்கடன் மீளஎம் இறை நல்வீணை வாசிக்குமே" எனவரூஉம் அப்பர் திருவாக்கை நோக்குக. அறிவான இறைவன் தன்பால் ஒடுங்கிய ஒன்றை மீண்டுந் தோற்றுவிக்க ஓங்கார முதலின் வாயிலாகத் துணைபுரியும் திறம் மனதால் நினைக்குந் தகையதோ? வாயால் சொல்லுந்தகையதோ? மாற்ற மனங் கடந்த அந்நிலையை "எம்மிறை நல்வீணை வாசிக்குமே" என்று எவ்வளவு அழகாகச் சுருங்கிய சொற்களால் நமது அப்பர் உருவகித்துக் காட்டுகிறார்? அந்நுட்பம் ஓராது புராணக் கதை வழி நின்று போரிடுவது உண்மையுணர முயல்வதாகாது.

" காடுடைய சுடலைப்பொடி பூசி " என்பது எதற்கறி குறி ? நாமரூபங்களெல்லாம் ஒடுங்கிப் பொடியாகி இறைவனுக்கு உடலாக நிற்றலுக்கு அறிகுறி. அப் பெருநிலையை ஞானசம்பந்தர் " காடுடைய சுடலைப்பொடி பூசி " என்று நமதுள்ளத்திற் படியுமாறு ஓவியம் வரைந்து காட்டுகிறார்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து, வாக்கு மனங் கடந்து, எல்லாமாகியும் வேறாகியும் நிற்கும் முழுமுதற் பொருளை நினைக்க இயலாத பெத்தர்கள் - முத்தர்களல்லாதவர்கள் - தங்கள் உள்ளத்தில் நினைந்து நினைந்து போற்ற, " தோடுடைய செவியன் " என்றும், " விடையேறி " என்றும், " ஓர் தூவெண்மதி சூடி " என்றும், " காடுடைய சுடலைப் பொடி பூசி " என்றும் எழுத்தோவிய வழிச் சுட்டிக் காட்டி உலகை உய்வித்த பெருமான் நமது ஞானசம்பந்த அடிகள். அத்திருவுருவம் ஒரு பெரும் அகண்டாகாரத்தின் படம் என்பதை எவரும் மறத்தலாகாது. " அவ்வடிவே இறை ; இறை பிறிண்டில்லை " என்று கொண்டு வழிபாடு செய்வது "விக்கிரக ஆராதனை"யின்பாற் படும். உள்ளப்படாத ஒன்றை உள்ளுதற்கு மெய்யடியார்கள் பிடித்துக் கொடுத்த ஒரு படமென்னும் உணர்வுடன் உருவ வழிபாடு செய்வதே அறிவுடைமை.

ஆண்டவனது அகண்டாகாரத்தை உணர்ந்த அருளாளர்கள், உலகமும் அவ்வுணர்வு பெறுதல் வேண்டுமென்னும் பெருங்கருணையான் மக்கள் நெஞ்சில் புகத்தக்க முறையில்

அழகோவியம்

ஆண்டவன் அழகு வடிவைப் பாட்டோவியமாகப் பலப்பல வழியில் எழுதிச் சென்றார்கள். அவ்வழகு ஓவியங்கள் புலன்களைக் கவர்கின்றன ; புந்தியைக் கவர்கின்றன ; உயிரைக் கவர்கின்றன. அவைகளுள் எத்துணை எடுத்து ஏழையேன் ஈண்டுக் காட்டவல்லேன் !

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே."

அன்பர்களே! இவ் வழகோவியத்தைப் பாருங்கள். ஆண்டவனது பரந்த இயற்கை வடிவம், இப் பாட்டோவியத்தில் மிளிரும் அழகை என்னென்று கூறுவேன்! அதை என் சொல்லால் விளக்க முடியாது. மனதால் அவ் வழகை நோக்குங்கள். என்ன அழகு! என்ன அழகு! காண முடியாத அழகை அப்பர் பாட்டில் காட்டுகிறார். "குனித்த புருவமாம்" "கொவ்வைச் செவ்வாயாம்" "குமிண் சிரிப்பாம்" "பனித்த சடையாம்" "பவளம் போல் மேனியில் பால்வெண் ணீறும்" "இனித்தமுடைய எடுத்த பொற்பாதமாம்"—அந்தோ! அவ்வழகு வடிவை உன்ன உன்ன மயிர் சிலிர்க்கிறது; உள்ளங் குழைகிறது. அன்பர்களே! இத் திருப்படத்தை விடுத்து அகண்டாகாரத்தை எங்ஙனம் நினைக்கவல்லேம்?

வாய் வேதாந்தம் வெறும் பாழையே மனதிற் படிவிக்கும். ஏமாந்து போகவேண்டாம்; வேண்டாம். அழகுருவை நோக்குங்கள்; உன்னுங்கள்; உருகுங்கள்.

வாய்வேதாந்தம்

உணர்வு பெற்றுப் பேச முடியாத பெருவடிவின் திருப்படத்தை அகங்கொள்ளுங்கள். செக்கச் செவேலெனச் சிவந்து கிடக்குஞ் செம்பொருளைப் "பவளம்போல் மேனி" என்று நம் பெருமான் நமது உள்ளத்தில் படிய வைக்கிறார். "பவள மேனியில் பால் வெண்ணீறும்!" என்ன அழகு! தமிழ்ச் செல்வர்களே! தமிழ்ப் பாவாணர்களாய் அப் பேரழகை நோக்குங்கள்.

இத் தமிழ் ஓவியங்களே உருவ வழிபாட்டுக்குப் பெருந்துணை செய்து வருகின்றன. உருவ வழிபாட்டின் நுட்பம் மேலே பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. உருவ வழிபாட்டின் நுட்பந் தேருது, குறை கூறுவோரைப் பற்றியும், கண்மூடி வழியில் நின்று அவ் வழிபாட்டை நிகழ்த்துவோரைப்பற்றியும் பெரிதும் இரங்குதல் வேண்டும். மன உணர்வுடைய பெத்தர்களுக்கு உருவ வழிபாடு மிக மிக இன்றியமையாதது.

யாண்டுமுள்ள ஒன்றன் உண்மையை உணர்தற்கு உலகில் பலதிற வழிகள் கோலப்பட்டிருக்கின்றன. அவைகளுள் தலையாயது, ஆண்டவனது அகண்ட நிலையை அறிவிக்கும் நுட்பங்களைக்கொண்ட அருள் உருவத்தை வழிபடுவதே யாகும். நம் பெரியோர்கள் உருவ வழிபாட்டைப் பெரிதும் வலியுறுத்தியதை மடமையெனச் சிலர் கருதுகிருர். வழி பாட்டிற்கெனக் கோள்ளப்படும் உருவமே கடவுளல்ல அல்ல என்று அறை கூவுகிறேன். அவ்வுருவம் ஆண்டவனது வாக்கு மனங்கடந்த அகண்டாகாரத்தின் இயலை நினைவூட்டும் ஓர் அறிகுறி என்க. உருவத்தையே முழுமுதலாக் கொள்வது அஞ்ஞானம்.

மனத்தின் இயல் என்னை ? உருவத்தில் ஒன்றுவது. ஆண்டவனே உருவங் கடந்து ஒளிர்பவன். அவனை எப்படி உன்னுவது ? உருவமென்பது கல் மண் வடிவங்கள் மட்டு மன்று. எண்ணம், ஒலி, எழுத்து, சொல் எல்லாம் உருவத்தின்பாற் பட்டனவே. எண்ணத்தால் இறைவனை வழிபடுவதும் உருவ வழிபாடே யாகும். மனவுணர்வு உள்ளவரை உருவ வழிபாட்டினின்றும் விடுதலையடைய முடியாது. ஆகவே உருவ வழிபாட்டின் வழியே உள்ளப்படாத ஒன்றை உணர்தல் வேண்டும்.

எண்ணமும் உருவமும்

ஆண்டவனை அகண்டம் என்று பன்மொழிகளால் பகர்ந்த அறிஞர்களே, "தலையே நீ வணங்காய்" என்றும், "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்" என்றும், "வணங்கத் தலைவைத்து" என்றும் அறிவுறுத்தி யிருத்தலை ஆழ்ந்து ஆராயுங்கள்.

நெஞ்சம் நிலைத்து நிற்றற்கு ஒரு கொழுகொம்பு வேண்டற்பாலதே. மனம் ஒன்றில் ஒன்றஒன்ற உள்ளொளி பெருகும்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே."

இத்திருத்தாண்டகத்தின் நுட்பத்தை ஓருங்கள். நிலைத்த நெஞ்சம் பெறுதற்கு உருவ வழிபாடு இன்றியமையாத தென்பது புலனாகும். இதுகுறித்து அடியேன் எழுதிய "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் நூலில் சிறிது விரித்துக் கூறியுள்ளேன். விளக்கம் ஆண்டுப்பார்க்க.

உருவ வழிபாடு என்றதும் தற்காலக் கோயில்கள் மீது சிலர் நினைவு செல்லும். தற்காலக் கோயில்களின் நிலைகொண்டு, உருவ வழிபாட்டைக் குறைகூறல் அறமாகத் தோன்றவில்லை. உருவ வழிபாடு நன்னோக்க முடையது. அந் நோக்க நிறைவேற்றத்துக்கெனவே கோயில்கள் காணப்பட்டன. அக் கோயில்கள் இழிந்த நிலையுற்றிருத்தல்

தற்காலக் கோயில்கள்

உண்மையே. உயரிய நோக்கமுடைய உருவ வழிபாட்டிற்கு நிலைக்களன்களாகவுள்ள கோயில்கள் இழிநிலையுறுமேல், அவைகளை ஒழுங்குபடுத்த முயலவேண்டுவது அறிஞர்கள் கடமையாகும். செந்நெறியினின்றும் பிறழ்ந்த கோயிலைக் "கள்ளர் குகை" என்று கிறிஸ்து நாதரும், "வேசையர் விடுதி" என்று மகாத்மா காந்தியும் கூறிய செம்மை மொழிகள் நினைவிற்கு வருகின்றன.

தற்காலக் கோயில்களை வன்மொழியால் யானும் பன்முறை கடிந்திருக்கிறேன். இழிவுற்ற கோயில்களைக் கடிவது உருவ வழிபாட்டைக் கடிவதாகாது. உருவ வழிபாடு, கோயில் புகுந்தே நிகழ்த்தவேண்டு மென்னும் நியதியில்லை. கோயில் புகாமலும் அவ் வழிபாட்டை நிகழ்த்தலாம்.

கோயில்களிலுள்ள இழிவுகளைச் சிலர் கருதாமலும், சிலர் பாராட்டாமலும் கோயில் புகுந்து வழிபாடு நிகழ்த்துகிருர். அத்தகைய "ஞானிகளை"க் கோயிலுக்குப் போதல் வேண்டா மென்று எவருந் தகைய வேண்டுவதில்லை. கோயில்களிலுள்ள இழிவுகளைக் கண்டு மனமுடையும் மக்கள் அக்கோயில் போகாது, வேறிடத்திருந்து வழிபாடு நிகழ்த்தலாம். அவர் கோயில்களின் இழிவை உளங்கொண்டு வழிபாட்டையே விடுவது கூடாது.

இயற்கை வடிவங்களையோ நடமாடுங் கோயில்களாகிய உயிர்களையோ வழிபடுவோர்க்கு, வேறு எவ்வழிபாடும் வேண்டுவதில்லை. எவ்வழியிலாவது நிலைத்த நெஞ்சம் பெறுதற்கும் அன்பு எழுதற்கும் ஒருவித வழிபாடிருத்தல் வேண்டு மென்பது எனது உட்கிடக்கை. மனவுணர்வு கொண்டு நிகழ்த்தும் வழிபாட்டு முறைகள் யாவும், உருவ வழிபாட்டின்பாற்பட்டன என்பதை எவரும் மறத்தலாகாது.

உருவ வழிபாட்டின் வரலாற்றை ஈண்டுச் சுருங்கச் சொல்லல் நலம் என்று தோன்றுகிறது. முதல் முதல் மக்கள் இயற்கை வடிவங்களை வழி பட்டுக் கொண்டிருந்தார்கள்; பின்னே அவ்வியற்கை வடிவங்களின் ஓவியங் களாக வரையப்பெற்ற உருவங்களை வணங்கத் தொடங் கினார்கள். ஆண்டவன் இயற்கை வடிவினன் என்னுங் குறிப்புத்தோன்ற ஆண்டவன் அருளுருவத்தை மரத்தடியில் வைத்து மக்கள் போற்றிய காலமுமுண்டு. இன்னும் இவ் வழிபாடு சிலவிடங்களில் நிகழ்ந்து வருகிறது. பின்னாளில் ஓவியத்துறை வளர வளர, ஓவியம் வல்லார், இயற்கையின் வேறுபல கூறுகளையும் ஓவியங்களில் வடித்து ஆண்டவன் உருவத்தைச் சுற்றி அணிசெய்தார். அவ்வோவிய அணிகள் நாளுக்கு நாள் கோபுரங்களாகவும் மண்டபங்களாகவும் பெருகின. இந்நாளில் ஓவிய நுட்ப உணர்வும் ஒடுங்கிற்று. வெறுக்கத்தக்க இழிந்த உருவங்கள் கோபுரங்களிலும் மண்டபங்களிலும் விலங்கு மனத்தால் பொறிக்கப்படு கின்றன. அவைகள் இக்கால மக்களின் மனோநிலையைப் புலப்படுத்துகின்றன. நாளுக்கு நாள் இக்கோயில்கள் தொகையில் பெருகலாயின. கோயில்கள் பெருகப் பெருக அவைகள் வாணிபக் கூடங்களாயின. தற்காலக் கோயில் கள் பலவற்றைக் கொலை களவு கள் காமம் பொய் என்னும் ஐம்பெரும் பாவங்கட்குரிய உறைவிடங்கள் என்றுங் கூறலாம்.

வழிபாட்டின் வரலாறு

அந்தோ! இக்காலக் கோயில்களின் இழிவை என் னென்று கூறுவேன்! கூறிக் கூறி என் நாவும் தழும்பேறி விட்டது; எழுதி எழுதி என் கையும் மரத்துவிட்டது. கோயில்களின் கொடுமை ஒன்றா? இரண்டா? ஆயிரம்; ஆயிரம்.

வெளியில் மக்களிடையில் தோன்றிய கண்மூடி வழக்க ஒழுக்கங்களும், மூடக் கொள்கைகளும், பிடிவாதங்களும், பிறவுங் கோயில்களில் புகுந்து உருவ வழிபாட்டின் நோக்கத்தையே சிதைத்துவிட்டன. கோயில்களில் ஒரு பெரிய பேய் தலைவிரித்தாடுகிறது. அப் பேய் எது என்று உங்கட்குத் தெரியும். அச் சாதிப் பேய் அரசு செலுத்துங் கோயில்களில் அன்புக் கடவுளுக்கு இடமேது? கோயில்கள் மிக இழிந்த நிலையுற்றிருக்கின்றன. சில அன்பர்கள் கோயில்களைச் சீர்திருத்தஞ் செய்ய முயன்று வருகிறார்கள். அவர்கள் முயற்சி வெற்றி தரின் நலன் விளையும்.

சாதிப்பேய்

கோயில்கள் இவ்விழிநிலை யுற்றதைக்கொண்டு உருவ வழிபாட்டையே கைவிடுதல் கூடாதென்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். ஆண்டவனது அகண்டாகாரத்தின் அறிகுறியாகிய உருவத்தை வீட்டிலும் வழிபடலாம்; வேறிடங்களிலும் வழிபடலாம். அவ்வுருவை இருந்துகொண்டும் நினைக்கலாம்; நடந்துகொண்டும் நினைக்கலாம். எப்படி எவ்வழியில் அவ்வுருவை நினைந்தாலென்ன? "எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் - மன்னியசீர் சங்கரன்றாள் மறவாமை பொருளன்றே" என்றார் சேக்கிழார். வழிபாட்டிற்கெனக் குறிப்பிட்ட ஓரிடம் வேண்டுவதில்லை.

கட்டுப்பாடில்லை

"குறிக ளும்அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அரிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே"

எனவரூஉம் அப்பர் திருவாக்கை நோக்குக.

இளமையில் எனக்கிருந்த கோயில் பற்றுக்கோர் அளவில்லை. நாளடைவில் அப்பற்று இறுகலாயிற்று. காரணம்

என்னை ? தற்காலக் கோயில் வழங்கும் ஆபாசக் காட்சியே யாகும். ஆபாசம் புகாத கோயில்கள் இன்னுஞ் சில இடங் களில் இருக்கின்றன. கோயில்களின் ஆபாசங்கள் கடவு ளிடத்திருந்து பிறந்தன அல்ல. அவை மனிதன் பாழும் உள்ளத்தினின்றும் பிறந்தனவேயாகும். அவ்வாபாசங்களைக் கண்டு உருவ வழிபாட்டில் என் வெறுப்புக்கொள்ளுதல் வேண்டும் ? அவ்வழிபாட்டுக்குரிய முறைகள் பலவுண்டு. அவைகளில் எதாயினும் ஒன்றைக் கொள்வது அறி வுடைமை.

ஆண்டவன் இயற்கையை உடலாகக் கொண்டவன் என்றும், அந்நுட்பத்தை அறிவுறுத்தவே அருளாளர்களால் அழகுப் படங்கள் எழுதப்பட்டன என்றும் மேலே சுருங் கச் சொல்லியிருக்கிறேன். அவ்வழகு உருவங்களை உன்ன

தியான யோகம்

உன்ன, அவைகள் நெஞ்சை ஒருமைப் படுத்தி, இயற்கைக் கடவுளை உணர்த்து கின்றன என்பதையும் முன்னர்ச் சிறிது விளக்கியிருக் கிறேன்.

நினைப்பற நினைந்து கடவுளின் அகண்ட நிலையை உணர்ந்த அன்பர்கள் அருளிய நூல்கள் எனக்கினிய

நூல்கள் கோயில்கள்

கோயில்களாகத் துணை புரிகின்றன. அக் கோயில்களின் உள்ளே நுழைந்தால், ஆண் டவனை, அவனது உடலாகிய இயற்கை வாயிலாக உணரலாம்.

அன்பர்களே ! மெய்யடியார்கள் எழுதிய பாட் டோவியங்களின் திறத்தை என்னென்று விரிப்பேன்? அவ் வோவியங்களில் ஆண்டவன் உடலையுங் காணலாம் ; உயி ரையுங் காணலாம். “ இயற்கை உடல் ; இறைவன் உயிர் ” என்னும் உண்மையை ஞானசம்பந்தர் உள்ளிட்ட பெரி யோர்கள் தங்கள் பாட்டோவியங்களில் வடித்துக் காட்டி

யிருக்கிறார்கள். அவ்வோவியங்கள் கண்ணைக் கவர்கின்றன; கருத்தைக் கவர்கின்றன; உயிரைக் கவர்கின்றன. உயிர் உள்ளம் உடல் எல்லாவற்றாலும் அவைகள் ஆண்டவன் அமுதைப் பருகச் செய்கின்றன. அத்திறத்தை எடுத்துக்கூற யானோ அருகன்? அத்திறத்தைத் தாயுமானார், இராமலிங்கசுவாமிகள் முதலிய தமிழ்ப் பெருமக்கள் உலகிற்கு விளக்கியுள்ளார்கள்.

"வரிவளரவிரொளி யரவரைதாழ
வார்சடைமுடிமிசை வளர்மதிசூடிக்
கரிவளர்தருகழல் கால்வலனேந்திக்
கனலெரியாடுவர் காடரங்காக
விரிவளர்தருபொழி லிளமயிலால
வெண்ணிறத்தருவிகள் திண்ணெனவீழும்
எரிவளரினமணி புனமணிசாரல்
இடைச்சுரமேவிய இவர்வணமென்னே."

"கார்கொண்டகடிகமழ் விரிமலர்க்கொன்றைக்
கண்ணியர்வளர்மதி கதிர்விடக்கங்கை
நீர்கொண்டசடையினர் விடையுயர்கொடியர்
நிழல்திகழ்மழுவின ரழல்திகழ்நிறத்தர்
சீர்கொண்டமென்சிறை வண்டுபாண்செய்யும்
செழும்புனலனையன செங்குலைவாழை
ஏர்கொண்டபலவினொ டெழில்திகழ்சாரல்
இடைச்சுரமேவிய இவர்வணமென்னே."

"ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்லஅடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவும் உண்மைப்பொருள்போலும்
ஏனத்திரளோ டினமான்கரடி யிழியுமிரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே"

"கைம்மகவேந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி

வெம்முகவேழத் திருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே.''

"வாவிவாய்த் தங்கிய நுண்சிறை வண்டினம்
காவிவாய்ப் பண்செயுங் கானப்பே ரண்ணலை
நாவிவாய்ச் சாந்துளும் பூவுளும் ஞானநீர்
தூவிவாய்ப் பெய்துநின் றூட்டுவார் தொண்டரே!''

"செவிகளார் விப்பன சிந்தையுட் சேர்வன
கவிகள்பா டுவ்வன கண்குளிர் விப்பன
புவிகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அவிகளுய்க் கப்படு மடிகள்வே டங்களே.''

"நிறையுடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்
பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்
கறையுடை மிடற்றண்ணல் கருதிய கானப்பேர்
குறையுடை யவர்க்கலாற் களைகிலார் குற்றமே.''

"கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரையினில்
ஆங்கமர் காளத்தி யடிகளை யடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே.''

"ஆரலாஞ் சுறவமேய்ந் தகன்கழனிச் சிறகுலர்த்தும்
பாரல்வாய்ச் சிறுகுருகே பயில்தூவி மடநாராய்
சீருலாஞ் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
நீருலாஞ் சடையார்க்கென் நிலைமைசென் றுரையீரே.''

"வம்பார்குன் றந் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பால்நெய்யோ டாடலமர்ந்தா னலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள்.''

"செல்வமல்கு செண்பகம்வேங்கை சென்றேறிக்
கொல்லைமுல்லை மெல்லரும்பீனுங் குற்றாலம்

வில்விஞெல்க மும்மதிலெய்து வினைபோக
நல்குநம்பான் நன்னகர்போலுந் நமரங்காள்."

ஞானசம்பந்தர் வரைந்த இத் தமிழ் ஓவியங்களைப் பாட்டுளங்கொண்டு பார்க்க; உன்னுக. இயற்கையை உடலாக இறைவன் கொண்டுள்ள உண்மையை ஞான சம்பந்தர் பாட்டுவழி உணர்த்துதலைத் தெளிக. "இயற்கை உடல்; இறைவன் உயிர்" என்னும் உண்மையை ஞான சம்பந்தப்பெருமான் அழகிய பாட்டோவியத்தில் எழுதிக் காட்டுகிறார். இவ்வோவியங்களில் நமது அன்னை இயற்கையைக் காணுங்கள்; நமது அப்பன் ஆண்டவனைக் காணுங்கள். அன்பர்களே! தேவாரக் கோயிலினுள் நுழைவோம். இயற்கை வடிவான இறைவனை - தென்னாடுடைய சிவனை - வழிபடுவோம். ஞானசம்பந்த ருள்ளிட்ட பெரியோர்கள் பாடல்களை ஓதி, ஓதி, அப்பொருட்களில் திளைத்து நிற்பதுஞ் சிறந்த வழிபாடாகும். இன்னும் விரிக்கிற் பெருகும்.

சீர்திருத்தம்

சீர்திருத்தம் என்னும் பெயரால் ஆண்டவன் நினைவு என்னும் வேரையே அறுத்துச் சாய்க்கச் சிலர் முயன்று வருகிறார். அச் சீர்த்திருத்தத்தால் மக்கள் வாழ்வு நலம் பெறுமென்பது ஒருதலை. முன்னோர்கள் நமக்களித்த சமய நூலெனும் ஞான வாள் கொண்டே இடையில் முளைத்த அஞ்ஞானக் களைகளை அறுத்தெறியலாம். எடுத்துக்காட்டாகப் பெரிய புராணமென்னும் பெருநூலை உங்கட்கு நினைவூட்டுகிறேன். பெரிய புராணம் ஒரு பெரிய சீர்திருத்த நூல் என்பது எனது உள்ளக்கிடக்கை. சேக்கிழார் பெருமான், தாம் வாழ்ந்த காலதேச வர்த்தமானத்துக் கேற்றவாறு ஆண்டவன் அருள்வழி நின்று செம்மைசேர் சீர்திருத்தம் நிகழ்த்தினார்.

சேக்கிழார் காலத்தில் சாதிப்பேய் பேராக்கம் பெற்றிருந்தது. அப்பேயை ஓட்டுதற்கு, அக்காலம் இடந்தரு வழிநின்று, சேக்கிழார் சீரியகடன் ஆற்றினர். கடவுளன்பு என்னும் பெயரால் அக்காலக் குறைபாடுகளைச் சேக்கிழார் களைந்தார். ஆதி சைவராகிய வன்றொண்டப் பெருந்தகையார் உருத்திர கணிகைக் குலத்திற் றோன்றிய பரவையாரையும், வேளாள மரபிற் பிறந்த சங்கிலியாரையும் மணங்கொண்டதும், அந்தணர் பெருமானாராகிய அப்பூதியடிகள் வேளாள குல திலகராகிய அப்பர் சுவாமிகளைக் குருவாகக் கொண்டதும், அவ்விருவரும் உடன் உண்டதும், கட்டடக்கோயிலைக் கடவுள் கருதாது, பூசலார் உள்ளக்கோயிலை அவர் விழைந்ததும், இன்னோரன்ன பிறவும் உங்கட்குத் தெரியும். இத்தகைச் சீர்திருத்த முறைகளால் தமிழ் நாட்டைச் செம்மை செய்த சேக்கிழார் பெருமானையும் இப்பொழுது சிலர் குறைகூறுகிறார். அன்னார் சேக்கிழார் திருவுள்ளத்தை அறியாதார் என்பது எனது கருத்து.

சேக்கிழார்

அறுபான்மும்மை நாயன்மார்களைப் பற்றி ஈண்டு இரண்டொரு குறிப்பை மட்டும் வெளியிடக் கருதுகிறேன். நாயன்மார்கள் வாழ்ந்த காலம், சாதி வேற்றுமை ஆக்கம் பெற்றிருந்த காலம். அக்காலத்தில் எவ்வழி நின்று சாதி வேற்றுமையை நீக்க வேண்டுமோ அவ்வழிநின்று அறிஞர்கள் கடனாற்றினார்கள். கலப்புமணம், உடன்உண்ணல் முதலியன பெரியபுராணத்திலிருத்தல் காணலாம். நாயன்மார்கள் அனைவரும் பற்பல சாதியில் தோன்றினவர். இவர்களை முதன்முதல் பாமலரால் போற்றினவர் தம்பிரான் தோழரெனுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள். குல முறைப்படி அவர் அந்தணர். அவ்வந்தணர் எல்லாச் சாதியாரையும் "அடியார்க்கு மடியேன்-

நாயன்மார்

அடியார்க்கு மடியேன்" என்று வழுத்தியிருத்தல் காண்க. அறுபான்மும்மை நாயன்மார்களை அம்முறையில் இப்பொழுதும் அன்பர்கள் வழிபடுகிறார்கள். இவ்வாறு கடவுள் அன்பு என்னும் வழிநின்று, காலத்திற்கேற்ற சீர்திருத்தம் நிகழ்த்திய பெரியோர்களை இழித்துக் கூறுவது பெருந்தகைமை யாகாது. அவ்வருளாளர் வழிநின்று இக்காலத்துக்கேற்ற சீர்திருத்தம் நிகழ்த்துவதே அறிவுடைமை.

இப்பொழுது நமது நாட்டில் தோன்றியுள்ள சில தீக்கிளர்ச்சிகளைக் கண்டு சில அன்பர்கள் மனங் கவல்கிறார்கள்; சில அன்பர்கள் சீற்றங் கொள்கிறார்கள். கவற்சியும் வேண்டாம்; சீற்றமும் வேண்டாம். வேண்டுவது ஒன்றே. அது தவம்; தவம்.

தீக்கிளர்ச்சியும் தவமும்

முன்னை நாளிலும் நாட்டிடைப் பல தீக்கிளர்ச்சிகள் தோன்றாமலில்லை. அந்நாளில் அறிஞர்கள் கவன்றதுமில்லை; சீறியதுமில்லை. சிவபாதவிருதயர் என் செய்தார்? மங்கையர்க்கரசியார் என் செய்தார்? அன்பர்களே! உன்னுங்கள்! அவர்கள் தவங்கிடந்தார்கள். அத் தவநெறியில் நிற்குமாறு உங்களையும் நான் வேண்டுகிறேன்.

மனித முயற்சிக்கு ஆண்டவன் அருள் தேவை. ஆண்டவன் திருவருள் வலத்தைப் பெற முயலவேண்டுவது நம் பெருங்கடமை. நமது ஞானசம்பந்த வள்ளல் தீக்கிளர்ச்சியைத் தொலைக்க ஆண்டவன் திருவருளையே வேண்டி நின்றார். "ஈனர்கட்கெளியேனலேன் திருஆலவாய் அரனிற்கவே" என்றும், "செய்யனே திருஆலவாய் மேவிய ஐயனே அஞ்சலென்றருள்செய்" என்றும், "அன்று முப்புரம் செற்ற அழக நின் - துன்று பொற்கழல் பேணு அருகரைத் - தென்ற வாது

திருவருட்டுணை

செயத் திருவுள்ளமே" என்றும் நமது ஆண்டகை, முதல்வன் அருளை வேண்டி வேண்டி நின்றது காண்க.

தீக்கிளர்ச்சிகளின் தோற்றத்துக்குரிய காரணங்களையும் நாம் கருதல் வேண்டும். காரணங்கள் பலப்பல கூறலாம். நமது கவலையீனமும் ஒரு காரணமாகும். சமய வளர்ச்சிக்காக நாம் என் செய்கிறோம்? எத்துணைச் சமயப் பள்ளிக்கூடங்களை நிறுவியிருக்கிறோம்? எத்துணைப் பேர் தேவாரத்தைப் பொருளுணர்ந்து ஓதுகிறார்? சிவதீட்சையின் நுட்பம் எத்துணைப் பேர்க்குத் தெரியும்? சிவநேசத்துக்குப் பதிலாகச் சாதி நேசமன்றோ நாட்டில் வளர்கிறது? கோயில்களில் சாதி! மடங்களில் சாதி! சைவத் திருக் கூட்டங்களில் சாதி! இக்கொடுமைகளல்லவோ தீக்கிளர்ச்சித் தோற்றத்துக்குக் காரணங்களாக நிற்கின்றன? இக் கொடுமைகள் இன்று களையப்படுமேல் நாளை தீக்கிளர்ச்சிகள் மாண்டொழியும்.

சமயத்தில் நம்மவர்க்குள்ள கவலையீனத்தைக் காலத்தின் அருமை நோக்கி விரித்துக்கூற அஞ்சுகிறேன். ஏறக்குறைய இரண்டேகால் மணிநேரம் உங்கள் முன்னிலையில் பேசியிருக்கிறேன். இன்னும் பல சொற்பொழிவுகள் நடைபெறுதல் வேண்டும். பிறவற்றைப் போதிய காலங் கிடைப்பின் சொற்பொழிவுகளைத் தழுவி முடிவுரையில் கூறலாமெனக் கருதுகிறேன். இதுகாறும் எனது புன்மொழியைப் பொறுமையுடன் செவிமடுத்த உங்கள் அனைவர்க்கும் எனது நன்றியறிதலான வணக்கம்.

சகோதரிகளே! சகோதரர்களே! எந்நாட்டவர்க்கும் இறைவன், நமது தென்னாடுடைய சிவன் என்பதை என் சிற்றறிவிற் கெட்டிய வரையில் விளக்கிக் கூறினேன். "தென்னா டுடைய சிவனே போற்றி - எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் மணிவாசகத்தின் உட்கிடக்

கையை ஓர்ந்து ஓர்ந்து மகிழ்ச்சியுறுங்கள்; அச் சிவத்தை உணர முயலுங்கள்; அதற்குரிய வழிபாட்டைச் செய்யுங்கள்; வழிபாட்டிற்குரிய வழிகளைக் கோலிய ஞானசம்பந்தப் பெருமானையும் மற்றவரையும் மறவாதேயுங்கள். அவர்களே நமக்கு வழிகாட்டிகள். மீண்டுமொருமுறை எனது நன்றியறிதலான வணக்கத்தைச் செலுத்துகிறேன். எனது பேச்சில் குற்றங் குறைகள் காணப்படுமேல் மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

அரிய தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
திருவிளையாடற் புராணம் மூலமும், ஈக்காடு - இரத்தினவேல் முதலியார் இயற்றிய உரையும் விசேடமும் ...	10	0
தமிழ் மறைத் திரட்டு ...	0	8
விநாயகர் பனுவல் திரட்டு ...	0	6
முருகவேள் பனுவல் திரட்டு ...	2	0
முருகன் திருவருட்பா-இராமலிங்க சுவாமிகள் ...	0	8
குசேலோபாக்கியாநம் மூலமும் உரையும் ...	(அச்சில்)	
கந்தபுராணச் சுருக்கம் மூலமும் உரையும் ...	(அச்சில்)	
தேவி தோத்திர மஞ்சரி ...	0	4
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்-முதல் திருமுறை-அரும்பத உரையும் சாத்திரக் குறிப்பும் ...	0	12
க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் ...	0	4
சமயத்தொகுதி ...	0	2
ஆறெழுத்தந்தாதி ...	0	2
சிவகுமாரர்கள் தேவாரங்கள் ...	0	$\frac{1}{4}$
,, பத்துப் பிரதிகள் ...	0	2

கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை, வேதப்ரவசன மந்திரத்து
சிவத்யானனந்த மஹரிஷி அவர்கள் எழுதிய
கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவரவில்லை என்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1

முருகவேள் புத்தகசாலை,

15, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை

திரு. வி. கலியாணசுந்தரனார் இயற்றிய நூல்கள்

திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் ... (அச்சில்)
பெரியபுராணம்-அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்
வசனமும் (அச்சில்) சன்மார்க்க போதமும் திறவும் 2 0
தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு:(முதற்பகுதி) 5 0
,, (இரண்டாம் பகுதி) 5 0
திருக்குறள்விரிவுரை:(முதற்பகுதி-பாயிரம்நான்கதிகாரம்) 5 0
,, (இரண்டம்பகுதி-அறத்துப்பால்-ஆறு அதிகாரம்) 5 0
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... 6 4
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ... 5 0
இந்தியாவும் விடுதலையும் 5 0 உள்ளொளி ... 3 8
தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு ... 6 4
பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி ... 3 0
இருமையும் ஒருமையும்? 0 8 நாயன்மார் வரலாறு 4 0
தமிழ்நூல்களில் பௌத்தம் 0 8 முருகன் அல்லது அழகு 2 0
இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் ... 1 12
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து 1 8
முடியா ? காதலா ? சீர்திருத்தமா ? 1 8
என்கடன் பணிசெய்து கிடப்பதே 1 0
சைவத்தின் சமரசம் 1 0 சைவத் திறவு 0 12
தமிழ்நாடும் நம்மாழ்வாரும் 1 0 முதுமை உளறல் 0 12
இமயமலை அல்லது தியானம் ... 0 12
காரைக்காலம்மையார் திருமுறை—அரும்பதக் குறிப்
புரையுடன் 0 10 ஆலமும் அமுதமும் 0 8
கடவுள் காட்சியும் தாயுமானாரும் 0 8 சித்தமார்க்கம் 0 10
உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல் 0 8
பொதுமை வேட்டல் 1 8 முருகன் அருள் வேட்டல் 0 10
திருமால் அருள்வேட்டல் 0 12 சிவனருள் வேட்டல் 0 8
கிறிஸ்துவின் அருள்வேட்டல் 0 6 புதுமை வேட்டல் 0 10
கிறிஸ்து மொழிக் குறள் 0 12 இருளில் ஒளி 1 0
நாயன்மார் திறம் 0 6 சமரச தீபம் 0 6
நினைப்பவர் மனம் 0 6 சைவ சமய சாரம் 0 4
அருகன் அருகே அல்லது விடுதலை வழி 0 8
பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும் 1 0
சித்தந் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல் 0 8
வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் 0 8

முருகவேள் புத்தகசாலை,

15, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை-14